இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்ட எலைற்றேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில் 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

# தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 04, இதழ்: 26 சோபகிருது வருடம், ஆடி மாதம் 11ஆம் திகதி வியாழக்கிழமை
(27.07.2023) ஹிஜ்ரி 1445, முஹர்ரம் - 08, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

BEAT the HEAT
The Reliable Fan
1st July to 31st July 2023
DISCOUNT 15% (On selected models only)
*Conditions apply
KDK SINCE 1909 JAPAN
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74



# அதிகாரப்பகிர்வை பேச விசேட அமைச்சர் குழு!

## ஜனாதிபதி ரணில் சர்வகட்சி மாநாட்டில் அறிவிப்பு

### யோசனைகளை முன்வைக்குமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பில் அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு நடத்த அமைச்சர்கள் மூவர் கொண்ட விசேட குழுவை நியமித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தேசிய நல்லிணக்க வேலைத்திட்டம் மற்றும் வடக்கு, கிழக்கு அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களின் கருத்துகளைப் பெறுவதற்கான சர்வகட்சி மாநாடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

02 பக்கம்

## சிறுநீரக சத்திர சிகிச்சைகள் இடைநிறுத்தப்படும் அபாயம்

### மருந்துத் தட்டுப்பாட்டால் நோயாளர்கள் பாதிப்பு

நா. தினுஷா

தேசிய சிறுநீரக வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் அந்த வைத்தியசாலையின் சுவாச உபகரணத் தொகுதியிலும் இயந்திரக் கோளாறு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நோயாளர்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

சிறுநீரக நோயாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கான சிகிச்சைகளை உரிய நேரத்தில் முறையாக...

02 பக்கம்



## கட்சியிலிருந்து என்னை நீக்குவதற்கு முடியாது

அமைச்சர் ஹரின்

02 பக்கம்

## கறுப்பு ஜூலை நினைவேந்தல் கிளிநொச்சியில் இன்று

இலங்கை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி சேவைச்சந்தை முன்றலில் கறுப்பு ஜூலை தமிழின அழிப்பின் 40ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 04 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த நினைவேந்தல் நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, கட்சியின் பொதுச்செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம்,...

» 02 பக்கம்

### பல்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

## நீர்த்தாரை பிரயோகத்தால் கொழும்பில் பதற்ற நிலை



படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க

நா. தினுஷா

களனி பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவரையும் ஏனைய மாணவர்களையும் விடுதலை செய்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து..

02 பக்கம்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் 12 நாடுகளின் தூதுவர்களுடன் கொழும்பில் நேற்றுமுன்தினம் (25) கலந்துரையாடல் நடத்தினர். இதன்போது சஜித் பிரேமதாசவுடன் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே கைலாகு கொடுத்து கருத்துகளை பகிர்ந்துகொண்டார்.

### கமெண்ட் கந்தர்...



ரணில் மோடியை சந்தித்தார்.. சஜித்தும் இந்திய உயர்ஸ்தானிகரை சந்தித்துப் பேசிவிட்டார்.. அப்போ ரெண்டுக்கும் சரியாப் போச்சு..

## தீவிரமடையும் டெங்கு பரவல்

### 55 ஆயிரம் பேர் பாதிப்பு

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மழையுடனான காலநிலை நிலவும் நிலையில், வாராந்தம் இனங்காணப்படும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. அதற்கமைய, கடந்த 23ஆம் திகதி வரையான இவ்வருடத்தின் 29ஆவது வாரம் வரை மாத்திரம் 55 ஆயிரத்து 260 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், டெங்கு நோய்த்தாக்கம் காரணமாக இவ்வாண்டு 37 மரணங்கள் பதிவாகியுள்ளன.

நாட்டில் கடந்த 17ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரையான ஒரு வார காலத்தில் மாத்திரம் நாடளாவிய ரீதியில் 1,564 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதற்கு முந்தைய வாரத்துடன் ஒப்பிடும்போது டெங்கு நோயாளர்கள் பதிவாகும் வீதம் 9.4 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளபோதிலும் டெங்கு அபாயம் இன்னும் குறைவடையவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனங்காணப்பட்ட மொத்த...

02 பக்கம்

## கனேடியப் பிரதமரின் கருத்து தவறானது

### இலங்கை அரசாங்கம் அறிவிப்பு

கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கடந்த 23ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில், தமிழ் இனப்படுகொலை நினைவு தினம் தொடர்பாக மேற்கொண்ட குறிப்பை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு முற்றாக நிராகரித்துள்ளது.

இது தொடர்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள...

02 பக்கம்

## இலங்கை கடற்படைக்கு எதிராக தமிழகத்தில் மாநாடு

07 பக்கம்

## போக்குவரத்து பொலிஸார் மீது பிலியந்தலையில் தாக்குதல்

### சந்தேகநபர்களான தம்பதியினர் கைது

பிலியந்தலை பொலிஸ் போக்குவரத்து பிரிவின் அதிகாரிகள் இருவரை தாக்கியதாகக் கூறப்படும் குழுவை சேர்ந்த கணவன் மற்றும் மனைவி ஆகியோரைக் கைது செய்துள்ளதாக கஹதுடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த குழுவினர் பொலிஸாரை சுற்றிவளைத்து...

02 பக்கம்

## மெனிங் சந்தை வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டம்

### 12 பேர் கைது

02 பக்கம்



கனடா - மொன்றியல் முருகன் கோயிலில் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் காவடி எடுத்து வழிபட்டுள்ளமை பலரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

## சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடும் பொறுப்பு

### மீண்டும் திணைக்களத்திடம்

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் வேரஹர சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடும் பிரிவின் செயற்பாடுகளை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து மீண்டும் திணைக்களம் முன்னெடுக்கவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## நிதி அமைச்சின் அதிகாரிகள் குறித்து நிதிக் குழு அதிருப்தி



அரசாங்க நிதி பற்றிய குழு முன்னிலையில் அழைக்கப்பட்ட அதிகாரிகள் சமுகமளிக்காமை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா...

02 பக்கம்




கோட்டாபய ராஜபக்ஷவின் பிரத்தியேக செயலாளராக பணிபுரிந்த சுகீஸ்வர சேனாதீர ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளார்.

இதேபோல கோட்டாபய ராஜபக்ஷவின் பக்கம் இருந்த மேலும் பல முக்கிய புள்ளிகள் ரணில் பக்கம் வரவுள்ளனராம்.

## அதிகாரப்பகிர்வை ...

அதன்போதே ரணில் இதனை அறிவித்துள்ளார்.அங்கு ரணில் மேலும் கூறியதாவது ,

இப்போதுள்ள பொலிஸ் கட்டளை சட்டத்தின் கீழ் ஒன்றும் செய்ய முடியாது.அதனால் பொலிஸ் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்களை செய்யவேண்டும்.புதிய பொலிஸ் சட்டமூலம் ஒன்றை தயாரிக்குமாறு நான் கூறியுள்ளேன்.அதன்படி நாங்கள் பொலிஸ் அதிகாரங்களை வரையறுக்கலாம்.பொலிஸ் அதிகாரங்கள் தவிர இதர அதிகாரங்களை எவ்வாறு பகிரலாம், அதற்கேற்ற சட்ட,அரசியலமைப்பு திருத்தங்களை எவ்வாறு செய்யலாம் என்று ஆராயுமாறு நான் அமைச்சரவையிடம் கூறியுள்ளேன்.இதனை பாராளுமன்றத்திலும் முன்வைக்கவுள்ளோம்.

மாகாண சபைகளை இயங்கவைக்க வேண்டுமாயின் அவற்றை சரியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.மத்திய அரசும் மாகாண சபையும் சரியாக செயற்படாவிட்டால் இந்தளவு நிதியை செலவழிப்பதில் அர்த்தமில்லை.கடந்த 15 வருடங்களில் பார்த்தால் தெற்குக் கூட அபிவிருத்தியாகவில்லை.மாவட்ட சபை இருந்த காலத்தில் கூட இதனை விட அதிகளவு வேலைகளை செய்தோம்.எனவே மாகாண சபைகளைக் கலைத்துவிட முடியாது. துரித அபிவிருத்தி தேவை.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை வைத்துக்கொண்டு மாகாண சபையில் போட்டியிட அனுமதிக்கப்படவேண்டும்.மாகாண சபை உறுப்பினர்களும் அதனை வைத்துக்கொண்டு பாராளுமன்றத்துக்கு வரலாம்.இதற்காக அரசியலமைப்பை திருத்த வேண்டும்

இந்த விடயங்களை ஆராய அமைச்சர்மார் மூவரை நாங்கள் நியமித்துள்ளோம்.சுசில் பிரேமஜயந்த ,பிரசன்ன ரணதுங்க , விஜேதாச ராஜபக்ஷ ஆகிய அமைச்சர்மார்கள் இதுபற்றி கட்சிகளுடன் பேசுவார்கள்.பிரதமரும் இதற்கு ஒத்துழைப்பார்.அதிகாரங்களை பகிர்வது தொடர்பான ஆலோசனைகள் ஓரிரு வாரங்களில் கிடைத்தால் தேவையான சட்ட திருத்தங்களை தயார் செய்து பாராளுமன்றத்தில் முன்வைக்கலாம்.இந்த வருடமோ அல்லது அடுத்த வருடமோ இதற்கு ஒரு முடிவை எட்டலாம். பொலிஸ் அதிகாரங்களை பகிர்வது தொடர்பில் ஆலோசனைகளை வழங்க பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரையும் இந்த குழுவில் இணைக்கவுள்ளேன். புதிய சட்டமொன்று பொலிஸ் துறைக்காக செய்யவேண்டும்.மாகாணசபைகளை வெறுமனே வைத்துக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. ஓரிரு வாரங்களில் இதனை நாங்கள் ஆலோசித்து முடிப்போம். இந்த திருத்தங்களை செய்ய அனைவரின் ஒத்துழைப்பும் தேவை என்றார் ரணில்.



இந்த சந்திப்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், மனோ கணேசன், டக்ளஸ் தேவானந்தா, சிவநேசத்துரை சந்திரகாந்தன், செல்வம் அடைக்கலநாதன், டியூ குணசேகர, ஜீவன் தொண்டமான், அரவிந்த குமார், டலஸ் அலகப்பெரும, டிரான் அலஸ், நாமல் ராஜபக்ஷ, எம்.ஏ.சுமந்திரன், சி.வி.விக்னேஸ்வரன், சித்தார்த்தன், விமல் வீரவங்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, ரவூப் ஹக்கீம், அதாவுல்லா, திகாம்பரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சாரதி...

இந்த விடயம் குறித்த அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சாரதி அனுமதிப்பத்திரத்தை அச்சிடும் பிரிவு, ஒப்பந்தத்தின் அடிப்படையில் சில மாதங்களுக்கு இராணுத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்தது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்த பிரிவை மீண்டும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் பொறுப்பேற்க தீர்மானித்துள்ளோம்.

அந்த பிரிவின் செயற்பாடுகள் தொடர்பில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் அதிகாரிகள் பயிற்சிப் பெற்று வருகின்றனர். முதலாம் திகதியின் பின்னர் அந்த அதிகாரிகளை சேவையில் ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பல்கலை மாணவர்கள்...

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நேற்று (26) கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. கொழும்பு நகர மண்டபத்துக்கு அருகில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டதால் பதற்றம் நிலவியது.

விகாரமகாதேவி பூங்காவுக்கு அருகில் ஆரம்பமான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கொழும்பு நகர மண்டபத்தை நோக்கி பயணித்த சந்தர்ப்பத்தில், பொலிஸர் ஆர்ப்பாட்டக்காரர்களை வழிமறித்து நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டு ஆர்ப்பாட்டத்தை கலைக்க நடவடிக்கை எடுத்தனர். இதன் காரணமாக நேற்று மதியம் கொழும்பு நகர மண்டபத்தை அண்மித்த பிரதேசங்களில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக கலகம் தடுக்கும் பொலிஸார் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையிலான பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். களனி பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கத் தலைவர் கெலும் முதன்நாயக்க மற்றும் செயற்பாட்டாளர் தில்ஷான் ஹர்ஷண ஆகியோர் கைதுசெய்யப்பட்டு 200 நாட்கள் நிறைவடைந்துள்ளதாகவும் அவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரியிருந்தார்கள்.

## கட்சியிலிருந்து...

நா. தினுஷா

அரசியல் தொடர்பான அறிவு எதிர்க் கட்சி தலைவருக்கு இருக்கிறது என்று நான் கருதுகிறேன். அவரால் என்னை கட்சியிலிருந்து நீக்க முடியாது என சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (26) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது விற்பதற்கு எதிர்க்கட்சி மாத்திரமே எஞ்சியிருக்கிறது. விற்பதற்கு வேறெதுவும் இல்லை. இதற்கு முன்னர் இந்த நாடு இருந்த நிலை நாட்டு மக்களுக்குப் புரியும். எதிர்க் கட்சியினரே ஆதரவற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, இனி விற்பதானால் எதிர்க்கட்சியையே விற்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசியல் தொடர்பான அறிவு எதிர்க் கட்சி தலைவருக்கு இருக்கிறது என்று நான் கருதுகிறேன். அவரால் என்னை கட்சியிலிருந்து நீக்க முடியாது. அந்தக் கூட்டத்தில் அவர் அன்று இருந்திருக்கவும் இல்லை. ஆகவே, சஜித் பிரேமதாச என்ற பெயரில் கடிதமொன்றிலேயே கையொப்பமிட்டுள்ளார்.

இவ்வாறான விடயங்களை கட்சியின் பொதுச் செயலாளரே செய்கிறார். தனிப்பட்ட, குறுகிய நோக்கங்கள், மனநோயையே இதனூடாக வெளிப்படுத்துகிறார்.

நான் இன்னும் சஜித் பிரேமதாசவை நேசிக்கிறேன். அதற்கான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ள முயற்சிக்கிறேன். அவருக்கு விருப்பம் இருக்குமாக இருந்தால் எமது முன்னாள் தலைவருடன் இணைந்து செயற்பட முடியும்.

எதிர்க் கட்சியினர் சகல தரப்புகளுடனும் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்துகிறார்களே தவிர, ஆசை மற்றும் பயத்தின் காரணமாக சரியான தீர்மானங்களை ஒருபோதும் எடுப்பதில்லை. நான் அறிந்த வகையில் சஜித் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்று கருதவில்லை. தேர்தலில் போட்டியிட்டு , ரணில் விக்கிரமசிங்கவிடம் தோற்றால் சஜித்தின் அரசியல் 57,58 வயதுடன் நிறைவுக்கு வந்துவிடும். ஆகவே, ஏதாவது செய்து இந்த தேர்தலிலிருந்து ஒதுங்கிவிடுவார் என்றே நான் கருதுகிறேன் என்றார்.

## கறுப்பு ஜூலை...

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தலைவர் நல்லதம்பி ஸ்ரீகாந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன் மற்றும் ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்தின் பொதுச்செயலாளர் அனந்தி சசிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பாக்கியசெல்வம் அரியநேத்திரன், கனகலிங்கம் சிவாஜிலிங்கம், ஈஸ்வரபாதம் சரவணபவன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் கலந்துகொள்ளவுள்ளதோடு நினைவுரைகளையும் ஆற்றவுள்ளனர்.

மனிதப் பேரவலத்துக்கும் தமிழின அழிப்புக்கும் தோற்றுவாயான கறுப்பு ஜூலைப் படுகொலையில் உயிர்துறந்த உறவுகளை அஞ்சலிக்கும் இந் நினைவேந்தல் நிகழ்வில் அனைத்துப் பொதுமக்களையும் இணைந்துகொள்ளுமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

## தீவிரமடையும்...

டெங்கு நோயாளர்களில் 49.7 சதவீதமானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர். அதற்கமைய கொழும்பில் 21.5 சதவீதமும் கம்பஹாவில் 21.7 சதவீதமும் களுத்துறையில் 6.4 சதவீதமும் கண்டியில் 07 சதவீதமும் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் 4 சதவீதமும் குருநாகலில் 3.6 சதவீதமும் என டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயாளர்கள் இனங்காணப்படும் எண்ணிக்கையின் அடிப்படையில் 52 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் அதிக அபாயமுள்ள பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. கண்டி , கொழும்பு தேசிய வைத்தியசாலைகள் , கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, கிரிபத்கொடை, கம்பளை, களுத்துறை, கஹவத்தை, கல்முனை மற்றும் புத்தளம் ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிதி அமைச்சின்...

தலைமையிலான அரசாங்க நிதி பற்றிய குழு தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது. குறிப்பிட்ட அமைச்சு தொடர்பான விடயங்கள் பாராளுமன்றக் குழுவில் கலந்துரையாடல்களுக்கு எடுக்கப்படும் போது அமைச்சுக்குத் தலைமைதாங்கும் பொறுப்புவாய்ந்த மற்றும் பாராளுமன்றத்துக்குப் பதிலளிக்க வேண்டிய அதிகாரிகள் சமுகமளித்திருக்க வேண்டும் என்பது குழுவின் நிலைப்பாடாக இருந்தது.

2003 ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 10ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை நேற்றுமுன்தினம் (25) குழுவின் கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

2023 ஜூன் இறுதி வரையான அரசிறை நிலைமையை நிதி அமைச்சின் அதிகாரிகள் முன்வைத்தனர். இந்த அறிக்கைக்கு அமைய வரவுசெலவுத்திட்டத்தின் முதன்மை இருப்பு 0.1வீத மிகையைக் காண்பித்துள்ளது. பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான சேர் பெறுமதி வரியின் அதிகரிப்புக் காரணமாக ஆண்டுக்கான வருமான சேகரிப்பு 41.9 வீதத்தினால் அதாவது 1,317 பில்லியனாக அதிகரித்துள்ளது. முதல் காலாண்டுக்கான செலவீனம் 2,650 பில்லியன் என்றும் இது 40.5 வீதத்தினாலான அதிகரிப்பாகும். உள்நாட்டு வட்டிச் செலவீனத்தில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதுடன் இது முதல் காலாண்டில் 51.6 வீதத்தினால் அதாவது 1,273 பில்லியனாக அதிகரித்துள்ளது.

குழுவின் முன்னிலையில் ஆஜராகியிருந்த அதிகாரிகள் வழங்கிய புள்ளிவிபரங்களின் அடிப்படையில் அரசிறை நிலைமை, பொருளாதார செயலாற்றுகை மற்றும் செலவீனங்கள், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் செயலாற்றுகை தொடர்பில் குழுவின் உறுப்பினர்கள் பல்வேறு கேள்விகளை எழுப்பினர்.

2023ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் 11.5 வீத சுருக்கம் தொடர்பில் அரசாங்க நிதி பற்றிய குழுவின் உறுப்பினர்கள் கவனம் செலுத்தினர். இவ்வாறான நிலைமைக்கான காரணம் மற்றும் இதற்கான காரணத்தைக் கண்டறிந்து பொருளாதாரம் மேலும் கீழ்நோக்கிச் செல்லாதிருக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து குழுவின் உறுப்பினர்கள் கேள்வியெழுப்பினர்.

அத்துடன், ஜனாதிபதியின் 2048 நோக்கத்துக்கு அமைய வளர்ச்சியை அடைவதற்கு அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலைபேறான திட்டங்கள் குறித்தும் குழு மேலும் கேள்வியெழுப்பியது. அபிவிருத்தியடைந்த நாடு என்ற வளர்ச்சியை அடைவது தொடர்பில் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தாலும் ஒத்திசைவான மூலோபாயத் திட்டமொன்று இருக்கவில்லை என்பது இதன்போது புலப்பட்டது.

இந்தக் கேள்விகளுக்கு வருகை தந்திருந்த அதிகாரிகளால் வழங்கப்பட்ட பதில்கள் தெளிவற்றதாகவும் செயலூக்கமற்றவையாகவும் காணப்பட்டன என்பது குழுவின் நிலைப்பாடாக இருந்தது. பணவீக்கம் மற்றும் வரிக் கொள்கை மாற்றங்களால் வரிகள் அதிகரிக்கின்றமை குறித்தும் குழு கேள்வியெழுப்பியது.

குழு முன்னிலையில் ஆஜராகும்போது தரவுகள் மற்றும் புள்ளிவிபரங்களுடன் தயாரான நிலையில் இருப்பது அவசியமானது என்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நிதி அமைச்சின் அதிகாரிகள் அதற்குரிய குழுவினருடன் சரியான பார்வையைக் கொண்டிருக்க வேண்டிய பொறுப்புடன் இருக்க வேண்டும் என்றும் அரசாங்க நிதி பற்றிய குழு வலியுறுத்தியது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர்களான சம்பிக ரணவக்க, மதுர விதானகே, ஹர்ஷன ராஜகருணா, நாலக கொடஹேவா, மயந்த திசாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இலங்கை கிரிக்கெட்டின் நிதி மோசடி தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம்

கடந்த ஆண்டு நடைபெற்ற இருபதுக்கு 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை கிரிக்கெட்டில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் அடுத்த பாராளுமன்ற அமர்வில் விவாதம் ஒன்று கோரப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே, இது தொடர்பில் எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பாராளுமன்ற அமர்வில் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை ஒன்றை முன்வைக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இவ்விவாதத்தின் போது, விளையாட்டுத்துறை அமைச்சரிடம் குறித்த மோசடி விவகாரம் தொடர்பில் வினவவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

2022ஆம் ஆண்டு உலகக் கிண்ண இருபதுக்கு 20 தொடரின் போது, இலங்கை கிரிக்கெட் அதிகாரிகளுக்காக மாத்திரம் 67 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட்டின் தலைவர் ஷம்மி சில்வா 11.7 மில்லியன் ரூபாவும் செயலாளர் மொஹான் டி சில்வா 5.4 மில்லியன் ரூபாவும் உப தலைவர்களான ஜயந்த தர்மதாஸ 5.1 மில்லியன் ரூபாவும் ரவின் விக்ரமரட்ன 4.7 மில்லியன் ரூபாவும் பொருளாளர் லசந்த விக்ரமரட்ன 4.8 மில்லியன் ரூபாவும் உதவி செயலாளர் சுஜீவ கொடலியத்த 4.7 மில்லியன் ரூபாவும் உதவிச் செயலாளர் கிரிஷாந்த கபுவத்த 3.6 மில்லியன் ரூபாவும் செலவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேநேரம், அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல 32 வீரர்கள் உள்ளிட்ட 52 பேருக்கான விசா அனுமதியை இலங்கை கிரிக்கெட் கோரியிருந்தது. எனினும் அவர்களுள் இலங்கை கிரிக்கெட்டுடன் தொடர்பில்லாத 35 பேர் உள்ளடங்கியிருந்ததாகவும் கூறப்படுகிறது.

# வெடிக்காத நிலையில் கைக்குண்டு மீட்பு

சாவகச்சேரி நிருபர்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் உள்ள காணியொன்றிலிருந்து நேற்று புதன்கிழமை (26)வெடிக்காத நிலையில் கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

பயன்படுத்தாத நிலையில் காணப்பட்ட மலசலகூட குழியை துப்புரவு செய்த போதே மேற்படி கைக்குண்டு அக்குழிக்குள் காணப்பட்டுள்ளது. இது தொடர்பாக சாவகச்சேரிப்



பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் பொலிஸார் கைக்குண்டை மீட்டெடுத்துள்ளனர்.

## மெனிங் சந்தை...

நா. தினுஷா

மெனிங் பொதுச் சந்தையிலுள்ள கடைத்தொகுதிகளை வெளிநபர்களுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த சந்தையில் பணியாற்றும் வர்த்தகர்கள் நேற்று (26) காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் நீதிமன்ற உத்தரவை மீறியதன் காரணமாக 12 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்தை தடுப்பதற்காக புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் (25) தடையுத்தரவு பெறப்பட்டிருந்த நிலையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மெனிங் பொது வியாபார சங்கத்தின் தலைவர் உட்பட 12 பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

கொழும்பு மாநகர சபையில் அனுமதிப் பெற்றுக்கொடுத்தவர்களுக்கு மாத்திரமே இந்த கடைகளை வழங்குவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போது பாதுகாப்புப் பிரிவின் பிரதானியொருவரின் மகனுக்கும் சிறப்புரிமைகளின் அடிப்படையில் கடையொன்று பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. வர்த்தகம் தெரியாத நபர்கள் இந்த சந்தைக்கு வந்தால், பொதுச் சந்தையே நெருக்கடியை சந்திக்கும். அதனால், ஏற்படவுள்ள அழிவுகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக மெனிங் பொது வியாபார சங்கத்தின் தலைவர் எச்.எம். உபசேன தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, பொதுசந்தையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் பெரும் எண்ணிக்கையிலான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஆர்ப்பாட்டத்தை நிறுத்துமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்ததுடன், தெளிவுபடுத்தலையும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு வழங்கியிருந்தனர்.

அதனைத் தொடர்ந்தும் வியாபாரிகளின் ஆர்ப்பாட்டம் தொடர்ந்ததால் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் வாக்குவாதமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கனேடிய பிரதமரின்...

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் கடந்த காலத்தில் இடம்பெற்ற மோதல்கள் குறித்த தவறான, திரிபுபடுத்தப்பட்ட கதையை கனடா தொடர்ந்தும் குறிப்பிடுவதானது உள்நாட்டு வாக்கு வங்கித் தேர்தல் ஆதாயங்களை மட்டுமே இலக்காகக் கொண்டதாக அமைவதுடன் இது பரந்த இன நல்லிணக்க இலக்குகளுக்கு உகந்ததாக மாட்டாது. இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள அனைத்து சமூகங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கைப் பாரம்பரியத்தைக் கொண்ட சமூகங்கள் மத்தியில் ஸ்திரத்தன்மை, முன்னேற்றம், சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் முயற்சிகளில் இலங்கைக்கு ஆதரவளிக்குமாறு கனடா மற்றும் அதன் தலைவர்களை இலங்கை கேட்டுக்கொள்கின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுநீரக ...

முன்னெடுக்காவிட்டால் நோயாளர்கள் உயிரிழக்க நேரிடும் என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் மருந்துத் தட்டுப்பாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சுகாதார பிரிவினர் மேலும் கோரியுள்ளனர்.

கொழும்பில் நேற்று (26) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே வைத்தியர் ஹரித அளுத்கே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நேற்று வரையில் சிறுநீரகம் தொடர்பான சத்திரசிகிச்சை முன்னெடுக்கப்பட்டு வந்தது. ஒருசில மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதற்கு பதிலாக, மாற்று தெரிவுகளை பயன்படுத்தியே விசேட வைத்திய நிபுணர்கள் உள்ளிட்ட குழுவினர் சத்திரசிகிச்சைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தேசிய சிறுநீரக வைத்தியசாலையில் சுவாச உபகரணத் தொகுதியில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டுள்ளது. தற்போது அதற்கு பதிலாக மாற்று வழியே பயன்படுத்தப்படுகின்றது. மத்திய மட்டத்தில் செயற்பட்டு வரும் சுவாச உபகரணக் கட்டமைப்பிலும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கு அப்பால், எதிர்வரும் காலங்களில் சிகிச்சை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக எமது பிராந்திய அலுவலகம் அறிவித்திருக்கிறது.

அதேபோன்று, குறிப்பிட்ட காலங்களின் பின்னரே இதுபோன்ற சத்திர சிகிச்சைகளுக்கு சரியான திகதி அறிவிக்கப்படும். இன்று பதிவாகும் ஒரு நோயாளருக்கு சத்திர சிகிச்சைக்காக வழங்கப்படவேண்டிய ஒப்புதல் ஆவணமொன்றும் இருக்கின்றது. அந்த ஒப்புதல் ஆவணத்துக்கமைய குறைந்தது இரண்டு மாதங்களில் அந்த சிகிச்சை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். ஒருவேளை மருந்து இல்லாமல் சிறுநீரக சத்திர சிகிச்சைக்கான திகதி ஒத்திவைக்கப்பட்டால், அது மேலும் சில வருடங்கள் காலதாமதமாவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன.

இந்த சகல நிலைமைகளும் நோயாளர்களின் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்துகின்றது. மருந்துத் தட்டுப்பாட்டினால் தற்போதும் நோயாளர்களின் உயிரே ஆபத்தை சந்தித்துள்ளது. குறிப்பாக சிறுநீரக நோயாளர்களை எடுத்துக்கொண்டால், அவர்களுக்கான சிகிச்சைகளை உரிய நேரத்தில் முறையாக முன்னெடுக்காவிட்டால் நோயாளர்கள் மரணிக்கும் நிலையை ஏற்படும். முழு அரச மருத்துவமனை கட்டமைப்பிலும் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது. உதாரணமாக, சில சந்தர்ப்பங்களில் பாணந்துறை வைத்தியசாலையில் இருக்கும் மருந்துகள் களுத்துறை வைத்தியசாலையில் இல்லாமல் போகலாம். களுத்துறை வைத்தியசாலையில் இருக்கும் மருந்துகள் பாணந்துறை வைத்தியசாலையில் இல்லாமல் போகலாம். மத்திய மருந்து களஞ்சியத்தில் 270 வரையான மருந்துகள் இல்லை என்று சுகாதார அமைச்சரே அறிவித்திருக்கிறார். நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் 1,300 மருந்து வகைகளில், தேவையில்லாத மருந்துகளை நீக்கி அவற்றின் எண்ணிக்கையை 800 வரையில் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அந்த 800 மருந்துகளையாவது நிலையான இருப்பில் வைத்திருக்கவேண்டும். ஆனால், அந்த 800 வகையான மருந்துகளில் 270 மருந்துகள் இல்லை என்று கூறுகிறார்கள். எனவே, தற்போதாவது ஊழல்களை நிறைவுக்குக் கொண்டுவந்து சேவையை வினைத்திறனாக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும். தனியார் வைத்தியசாலைகளிலும் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்றார்.

## போக்குவரத்து...

தாக்கும் போது பிரதான சந்தேக நபரின் மகன் ஒருவரின் கைத்தொலைபேசியில் வீடியோ எடுக்கப்பட்டமை பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான தம்பதியின் இரு மகன்கள் உட்பட மேலும் பலர் கைது செய்யப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (25) இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பிலியந்தலை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவைச் சேர்ந்த இரண்டு கான்ஸ்டபிள்களே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளனர்.

# இலவச கண்புரை சத்திர சிகிச்சை குறித்து யாழ்.போதனா வைத்தியசாலையின் அறிவிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான கண்புரை சத்திர சிகிச்சையினை யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

இவர்களுக்கான சத்திர சிகிச்சைகள், கண்சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மலரவன் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக் கண்புரை சத்திரசிகிச்சை திட்டமானது ஐக்கிய இராச்சியத்தின் Assist RR நிறுவனத்தினால் ஒருங்கிணைக்கப்படுவதுடன் சத்திர சிகிச்சைகளுக்கான கண்வில்லைகளும் சத்திரசிகிச்சை நுகர்வு பொருட்களும் மற்றும் மருந்துப் பொருட்களும் மலேசியாவைச் சேர்ந்த அலாக்கா மற்றும் ஆனந்தா நிறுவனத்தினரால் வழங்கப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில், தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரதேசத்தில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை செய்யவேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண்பரிசோதனை முகாம் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

அதேபோன்று, பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவுசெய்யும் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் நடைபெறவுள்ளது. குறித்த முகாமில் கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத்தரப்படும்.

கண்புரை சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்துக்குரிய வைத்தியசாலைகளில் இருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கும் சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருந்து அவர்களது பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைக்கு கூட்டிச்செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் சுகாதாரத் திணைக்களத்தினரால் இலவசமாக மேற்கொள்ளப்படும்.

எனவே, கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவுசெய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# யாழ் நிலா அதி சொகுசு ரயில் சேவை ஓகஸ்ட் 04ஆம் திகதி முதல் ஆரம்பம்

கல்கிசையிலிருந்து காங்கேசன்துறை வரையிலான யாழ் நிலா எனும் அதி சொகுசு புதிய ரயில் சேவையொன்று எதிர்வரும் ஓகஸ்ட் 04ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வார இறுதிகளில் செயற்படவுள்ள இந்த புகையிரத சேவையானது, வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணிக்கு கல்கிசை ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு சனிக்கிழமை அதிகாலை 06 மணிக்கு காங்கேசன்துறை ரயில் நிலையத்தை சென்றடையும் என்றும், காங்கேசன்துறையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணிக்கு புறப்பட்டு திங்கட்கிழமை காலை 06 மணிக்கு கல்கிஸை ரயில் நிலையத்தை வந்தடையும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த அதி சொகுசு ரயிலில் உணவகங்கள் உள்ளிட்ட சகல வசதிகளும் உள்ளதாகவும் ரயிலின் டிக்கெட்டுகளை முன்கூட்டியே முன்பதிவு செய்ய வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

யாழ் நிலா ரயிலில் முதல் வகுப்பு ஆசனமொன்றுக்கு 4000 ரூபாவும் இரண்டாம் வகுப்பு ஆசனமொன்றுக்கு 3000 ரூபாவும் கட்டணம் அறவிடப்படவுள்ளதுடன், மூன்றாம் வகுப்பு ஆசனமொன்றுக்கு 2000 ரூபாவும் அறவிடப்படவுள்ளது.

இந்த ரயில் சேவை நல்லூர் திருவிழாவை இலக்காகக் கொண்டு எதிர்வரும் ஓகஸ்ட் 18ஆம் திகதி முதல் தினமும் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

# உடுத்துறையில் கடற்படைக்கு காணி சுவீகரிக்கும் நடவடிக்கை மூன்றாவது நாளாகவும் முறியடிப்பு



சாவகச்சேரி நிருபர்

யாழ்ப்பாணம் - உடுத்துறையில் கடற்படைக்கு காணி சுவீகரிக்கும் நடவடிக்கை முறியடிக்கப்பட்டது. மூன்றாவது நாளாக நேற்றும் கடற்படைக்கு காணி அளவிடும் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

தனியார் ஒருவருக்கு சொந்தமான காணியை கடற்படைக்கு சுவீகரிப்பதற்காக நில அளவைத் திணைக்களத்தினர் யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்திருந்தனர்.

அவர்களை வழிமறித்த காணி உரிமையாளர், கிராம மக்கள், அரசியல் பிரமுகர்கள், இது எங்களுடைய சொந்த காணி. இதனை அளவீடு செய்வதற்கு அனுமதிக்க முடியாது என்று எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில், குறித்த நில அளவை அதிகாரியால் தனக்கு எழுத்துமூலமாக கடிதம் ஒன்றினை தருமாறு கூறப்பட்ட நிலையில் காணி உரிமையாளர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சுகிர்தன் ஆகியோரால் ஒப்பமிட்டு கடிதம் வழங்கப்பட்ட நிலையில் குறித்த காணி அளவீடு செய்வதை நிறுத்திவிட்டு நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றுள்ளனர்.

இதேவேளை, வடமராட்சி கிழக்கில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் தொடர்ச்சியாக ஐந்து தினங்கள் கடற்படைக்கு காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் இடம்பெற உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பாடசாலை அனுமதிக்கென ரூ.3 இலட்சம் மோசடி

## கண்டியில் ஒருவர் கைது

கண்டி நகரிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் மாணவி ஒருவரை சேர்ப்பதாக கூறி மூன்று இலட்சம் ரூபாவை பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவரை பொலிஸார் நேற்று புதன்கிழமை (26) கைது செய்துள்ளனர்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குளகம்மன பிரதேசத்தில் வசிக்கும் ஒருவரிடம், குறித்த சந்தேக நபர் மூன்று இலட்சம் ரூபாவைப் பெற்றுள்ளார்.

இவ்வாறு பெறப்பட்ட பணம் மோசடி செய்யப்பட்டமை தொடர்பில் கடந்த பெப்ரவரி மாதம் கட்டுகஸ்தோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர் மெனிக்கின்ன பிரதேசத்தை சேர்ந்த குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

# அனுமதி பெறப்படாது அரச காணியில் அமைக்கப்பட்ட வவுனியா வர்த்தக சங்க கட்டிடம் தொடர்பில் நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் உத்தரவு

வவுனியா நிருபர்

முறையான அனுமதி பெறப்படாது அரச காணியில் அமைக்கப்பட்ட வவுனியா வர்த்தக சங்க கட்டிடம் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிகாரிகளுக்கு வடக்கு மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் வடமாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் இணைத் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது வவுனியா நகரின் அபிவிருத்தி தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையால் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. இதன்போது நகரில் ஏற்கனவே சட்டவிரோதமாக கட்டப்பட்ட கட்டடங்கள் தொடர்பாகவும் நகரில் உள்ள காணிகளை பாதுகாப்பது தொடர்பாகவும் எவ்வாறான நடவடிக்கையினை எடுப்பது என்று அபிவிருத்திகுழு தலைவரால் கோரப்பட்டதுடன், வவுனியா வர்த்தக சங்கத்தால் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இதன்போது, நகரின் அபிவிருத்தி தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும்வகையில் புதிய வர்த்தக சங்க கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. குறித்த கட்டிடம் அமைந்துள்ள காணி அரச காணியாக இருப்பதால் பிரதேச செயலாளர் ஏன் அதற்கான நடவடிக்கையை எடுக்கவில்லை என்று வடக்கு ஆளுநரால் விளக்கம் கோரப்பட்டது.

இதற்கு பதில் அளித்த பிரதேச செயலாளர் நா.கமலதாசன், இது தொடர்பாக நகர சபைக்கு



கடிதம் அனுப்பியதாகவும் அவர்கள் அதற்கான நடவடிக்கையினை எடுக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

எனினும், காணி பிரதேச செயலாளரின் கீழ் இருப்பதால் நீங்கள் கட்டடம் அமைக்க முன்னரே அதற்கான நடவடிக்கையினை எடுத்திருக்க வேண்டும் என்று ஆளுநர் தெரிவித்திருந்தார். குறித்த விடயம் தொடர்பாக மாவட்ட குழுக்கூட்டத்தில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

இதன்போது, வவுனியா நகரில் இவ்வாறு பல கட்டடங்கள் அனுமதியற்று கட்டப்படுவதாகவும் அதற்கான நடவடிக்கையினை எடுக்க வேண்டிய அதிகாரிகள் அமைதியாக இருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. வவுனியா மாநகர சபை மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருக்கு எதிராக இதன்போது குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டதுடன், வடமாகாண ஆளுநரும் அவர்களது செயற்பாடு தொடர்பில் கண்டித்திருந்தார்.

அத்துடன், தனியார் பஸ் உரிமையாளர் சங்கமும் புதிதாக கட்டடம் அமைத்துள்ள காணியும் அவர்களுக்கானது அல்ல எனவும் அதற்கும் அனுமதி பெறப்படவில்லை எனவும் பிரதேச செயலாளர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இவ்வாறான அனுமதியற்ற கட்டடங்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணித்த வடக்கு ஆளுநர், ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த கட்டடங்களின் பெறுமதிக்கமைய அவர்களிடமிருந்து குத்தகையினை அறவிட்டு குத்தகை அடிப்படையில் அதனை வழங்குவதற்கான நடவடிக்கையினை எடுக்குமாறும் அல்லது குறித்த காணிகளை மீளப் பெறுமாறும் தெரிவித்ததுடன், காணி விடயத்தில் அதிகாரிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

# இலங்கையில் சர்வதேச தரத்துக்கு நிகரான மரணச்சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை

## திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் சங்கத் தலைவர் அநுர ஹேரத் தெரிவிப்பு

மாத்தளை நிருபர்

ஒரு மனிதன் இறந்த பின்பு இதுவரை காலமும் திடீர் மரண விசாரணை அதிகாரியினால் வழங்கப்பட்டு வந்த மரணச் சான்றிதழ்களுக்குப் பதிலாக சர்வதேச மரணச் சான்றிதழுக்கு நிகரான மரணச் சான்றிதழ்களை எதிர்வரும் மாதம் இலங்கையில் வழங்க நீதி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அகில இலங்கை திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் சங்கத் தலைவர் அநுர ஹேரத் தெரிவிக்கின்றார்.

பேராதனை வைத்தியசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அநுர ஹேரத் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

இதுவரை காலமும் மரணச்சான்றிதழின் பீ.18 விண்ணப்பப்படிவத்தில் மரணத்துக்கான காரணத்தை மாத்திரம் குறிப்பிட்டு மரணச்சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டதற்குப் பதிலாக வழங்கப்பட இருக்கும் புதிய மரணச்சான்று பத்திரத்தில் மரணம் ஏற்படக் காரணமாக இருந்த நான்கு காரணிகளை முன்வைத்து 24 கருத்துகள் மேற்படி புதிய மரணச்சான்றிதழில் அடங்கவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

இதில் நோயாளர்களுக்கு வழங்கப்பட்ட வைத்திய சேவைகளின் விபரங்கள், நோயாளிகள் சம்பந்தமான விபரங்கள், உறவினர்கள் சம்பந்தமான விபரங்கள் இப்புதிய மரணச்சான்றிதழ் பத்திரத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இது சர்வதேச சட்டத்திட்டங்களுக்கமைய நிர்மாணிக்கப்பட்ட மரணச்சான்றிதழ் பத்திரமாகும்.

இந்த நாட்டில் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் பழங்காலத்து சட்டவிதிகளுக்கமைய நியமிக்கப்பட்டபோதிலும் மேற்படி நியமனங்கள் இக்காலத்துக்கு ஒவ்வாத நியமனங்கள் எனக் கருதப்பட்டு வருவதால் மேற்படி நியமனங்களை இரத்துச்செய்து நாட்டில் இருக்கின்ற 331 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு தலா ஒரு மரண விசாரணை அதிகாரி வீதம் நியமிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் சங்கம் தெரிவிக்கின்றது.

இதனடிப்படையில் தேசிய வைத்தியசாலை, ஆதார வைத்தியசாலை, மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றுக்கு நியமனம் செய்யப்படவிருக்கும் திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு மேலதிகமாக ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுக்கும் தலா ஒரு மரண விசாரணை அதிகாரி நியமிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இவ்வாறான புதிய நியமனங்கள் வழங்கப்படும்போது தேசிய மட்டத்தில் இன ரீதியாக நியமனம் பெற்றிருக்கும் மரண விசாரணை அதிகாரிகளின் நியமனங்கள் இரத்துச் செய்யப்படவுள்ளதோடு நாடளாவிய ரீதியில் மொழிப்பிரச்சினையை மையமாகக் கொண்டு வழங்கப்பட்டு வரும் நியமனங்களை வழங்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

மேற்படி செய்தியாளரின் சந்திப்பின்போது அகில இலங்கை திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் சங்கச் செயலாளர் மொஹம்மட் பர்ஹான் உட்பட பலர் இதன்போது கருத்து தெரிவித்ததோடு, பேராதெனிய வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி அமல் ஜயவர்தன மூலம் மேற்படி செய்தியாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆடி மாதம் 11ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்:** புதிய தொழில் வியாபாரங்களை ஆரம்பித்தால் சிக்கல் உண்டு. செலவு செய்யும்போது சிந்தித்துச் செய்யுங்கள்.

**ரிஷபம்:** வாகனங்களால் அதிக சுகமும் இலாபமும் உண்டு. புகழ், செல்வாக்கு சிறப்பாக அமையும்.

**மிதுனம்:** எதிரிகள் உங்களிடம் பணிந்து நடந்து கொள்வார்கள். தற்காலிக தொழில் வியாபாரத்தில் நல்ல இலாபம்.

**கடகம்:** சரியான முடிவுகளை எடுக்க முடியாது திண்டாடுவீர்கள். அதிர்ஷ்டத்தை சோதித்துப் பார்க்காதீர்கள்.

**சிம்மம்:** வாகனங்களில் தூரப் பயணங்களை ஒத்தி வைப்பது நல்லது. அனைத்தும் மந்த கதியில் இயங்கும்.

**கன்னி:** முயற்சிகள் அனைத்தும் பலிக்கும் நாள். நினைத்த காரியத்தை முடித்தே தீருவீர்கள்.

**துலாம்:** உங்கள் மதிப்பையும் கௌரவத்தையும் நீங்களே கெடுத்துக்கொள்வீர்கள். வீண் பேச்சு வேண்டாம்.

**விருச்சிகம்:** நீங்கள் விரும்பிய உணவு, படுக்கை அமையும். முக மலர்ச்சியுடன் சுறுசுறுப்பாக காணப்படுவீர்கள்.

**தனுசு:** ஆணவத்தால் அவமானமடைய வேண்டி வரும். பணத்தின் பெருமையை அறியும் நாள்.

**மகரம்:** புதிய நண்பர்கள் தொடர்பால் புதிய உறவினை ஏற்படுத்திக்கொள்வீர்கள். தேவைக்கேற்ப பணம் கிடைக்கும்.

**கும்பம்:** உங்கள் கீழ் உள்ளவர்களை நம்பி எதையும் செய்யலாம். குடும்பத்தில் மகிழ்ச்சியான காரியங்கள் நடைபெறும்.

**மீனம்:** தந்தையின் சொத்துகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள். தர்ம சிந்தனையுடன் செயலாற்றுங்கள்.

**திதி** :நவமி பி.ப. 3.48 வரை பின் தசமி (வளர்)

**நட்சத்திரம்** :விசாகம் பி.இ.1.28 வரை பின் அனுஷம்

**யோகம்** :சித்த யோகம் முழுவதும்

**வார சூலை** :தெற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது

**நல்ல நேரம்**:மு.ப.11.01 – 12.01 மணிவரை

**ராகு காலம்** :1.31 – 3.01 மணிவரை

**எமகண்டம்** :6.01- 7.31 மணிவரை

**குளிகை**:9.01 - 10.31 மணிவரை

**சந்திராஷ்டமம்**: மேஷ ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தனஅதிர்ஷ்டம்**: திருவாதிரை, சுவாதி, சதயம் (பிறந்தவர்களுக்கு)

**விசேட தினம் :** ---------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739




தேசிய லொத்தர்
வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்



# வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஜூலை 27ஆம் திகதி, வியாழக்கிழமை



## பாதுகாக்கப்படவேண்டிய யானைகள்!

கடந்த ஏழு மாதங்களில் சட்டவிரோத மின்கம்பிகளால் 36 யானைகள் பலியாகியுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விவசாய நிலங்களையும் மனித உயிர்களையும் காக்க வனவிலங்கு திணைக்களமும் மின்சார வேலிகளை உருவாக்கினாலும் அது சரியான தொழில்நுட்ப முறைப்படியே மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், அறிவியல்பூர்வமற்ற முறையில் போடப்பட்டுள்ள அங்கீகாரமற்ற மின்கம்பிகளே யானைகளின் இந்த உயிரிழப்புகளுக்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது.

வனவிலங்கு திணைக்களம் சட்டவிரோதமாக மின்கம்பிகளை இடுபவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துகிறது. எனினும், சட்டவிரோதமாக மின்கம்பிகள் தொடர்ந்தும் அமைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விளைநிலங்கள் மற்றும் சொத்துகளைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத மின்கம்பிகளால் மின்சாரம் தாக்கி உயிரிழக்கும் வன விலங்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

வனஜீவராசிகள் திணைக்களத்தின் பதிவுகளின்படி, சட்டவிரோத மின்கம்பிகளால் மின்சாரம் தாக்கி அதிகளவான யானைகள் உயிரிழந்துள்ளன. அதன்படி, கடந்த 7 மாதங்களில் மின்சாரம் தாக்கி மொத்தம் 36 யானைகள் உயிரிழந்துள்ளன.

யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதைத் தடுக்க வனவிலங்கு திணைக்களம் மின்சார வேலிகளை அமைத்தது. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப விவரக்குறிப்புகள் மூலம் வடிவமைக்கப்பட்ட ஒரு முறையின்படி இந்த வேலிகளை அமைத்து, யானைகளின் இயற்கையான இயக்கத்திற்கு இடையூறாக இல்லாமல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட போதும் அது வெற்றிகரமாக முன்னெடுக்கப்படவில்லை .

நாட்டில் இந்த ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் திகதி வரை யானை – மனித மோதலால் 94 பேரும், 238 யானைகளும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.அத்துடன், பெரும்பாலான யானைகள் மின்சாரம் தாக்கியதாலும், துப்பாக்கிச் சூட்டினாலும் உயிரிழப்பதாக வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தரவுகளின் அடிப்படையில், அநுராதபுர மாவட்டத்திலேயே அதிகளவான யானைகள் உயிரிழந்துள்ளன.

இதன்படி 74 யானைகள் இனங்காணப்படாத காரணங்களால் உயிரிழந்துள்ளதாகவும், 49 யானைகள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாகவும், 36 யானைகள் மின்சாரம் தாக்கி உயிரிழந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது.

எவ்வாறாயினும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் உயிரிழப்புகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் யானை – மனித மோதல் காரணமாக 146 பேரும், 439 யானைகளும் உயிரிழந்ததாகச் சொல்லப்படுகிறது.

யானை தினமொன்றுக்கு சராசரியாக 40 முதல் 50 கிலோ மீற்றர் வரை நடக்கும். தினமும் 250 கிலோ வரை உணவு எடுத்துக்கொள்ளும். 150 லீற்றர் தண்ணீர் குடிக்கும். ஒரு இடத்தில் சாப்பிட்ட உணவின் மூலம், சாணத்தில் இருக்கும் விதைகளுக்கு உயிர்கொடுத்து புதுச் செடிகளையும், மரங்களையும் மற்றொரு இடத்தில் வளர்க்கும் என்று சொல்லப்படுகிறது.யானைகளைக் குழந்தையைப் போல அன்பானது மற்றும் குறும்புத்தனம் கொண்டது என்று சொல்வதுண்டு.

இன்றைய சூழலில் யானை-மனித எதிர்கொள்ளல் என்பது மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது. காட்டை ஒட்டியுள்ள பகுதிகளில் வாழும் விவசாயிகள் தென்னை, வாழை, கரும்பு போன்ற பணப் பயிர்களை அதிகளவில் பயிரிடுகின்றனர். இந்தப் பயிர்கள் யானைகளுக்கு மிகப் பிடித்தமானவை என்பதால் காட்டை ஒட்டியுள்ள விவசாய நிலங்களைத் தேடி வெளியே வருகின்றன.ஆனால், யானைகளுக்குப் பிடிக்காத பணப் பயிர்களும் இருக்கின்றன. அவற்றைப் பயிரிடுவதால் யானை-மனித எதிர்கொள்ளலைத் தவிர்க்க முடியும். பயிர்களுக்குச் சேதம் ஏற்படாது. இதனை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

மனித காரணங்களால் அல்லாமல் இறக்கின்ற யானைகளைப் பற்றி அதிர்ச்சியடையத் தேவையில்லை. ஆனால், மின்வேலிகளால் யானைகள் அடிபடுவதுதான் மிகவும் கவலைக்குரிய விடயம் . விவசாயிகள் தங்களுடைய பயிர்களைப் பாதுகாக்கத்தான் வேலிகளை அமைக்கிறார்களே தவிர, யானைகளைக் கொல்லவேண்டும் என்பதற்காக அல்ல.

சட்டவிரோத மின்வேலிகளை முடிவுக்குக் கொண்டுவருவது மிக அவசியமானது. அதேசமயம், காடுகளை ஒட்டியுள்ள நிலங்களில் யானைகளை ஈர்க்கும் தாவரங்களைப் பயிரிடுவதை தவிர்க்க வேண்டும். மேலும், யானைகள் இறப்பை ஒரு வனக்கோட்டத்தோடு இல்லாமல் பரந்துபட்ட நிலபரப்புடன் தான் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். யானைகள் முன்பு பயணிக்காத இடங்களில் தற்போது பயணிக்கின்றன. இதற்கு யானைகளின் பாரம்பரிய வழித்தடங்களில் ஏற்பட்டுள்ள தடைகள் தான் காரணம். அத்தகைய தடைகளையும் அகற்ற வேண்டும். யானைகள் விடயத்தில் அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்தினால் யானைகளை மட்டுமல்ல, மக்களையும் பாதுகாக்க முடியும்.

## இன்றைய நாளில்...

- 1921 – இயக்குநீர் இன்சுலின் இரத்தச் சர்க்கரையைக் கட்டுப்படுத்துவதாக டொராண்டோ பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர்.
- 1955 – மலேசியாவின் முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக வீ. தி. சம்பந்தன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1975 – விடுதலைப்புலிகளின் முதலாவது ஆயுதத் தாக்குதல் நடத்தப்பட்டது. யாழ்ப்பாண மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பா சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 1983 – கறுப்பு ஜூலை: கொழும்பு வெலிக்கடைச் சிறையில் இடம்பெற்ற இரண்டாம் கட்டப் படுகொலை நிகழ்வில் 18 தமிழ்க் கைதிகள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர்.



## மட்டக்களப்பில் அபிவிருத்திக்குழுக் கூட்டமா?
# அரசியல்வாதிகளின் சண்டித்தன அரங்கேற்றமா?

மட்டக்களப்பு தவபாலன்

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டம் கடந்த 25ஆம் திகதி இடம்பெற்றது. அதில் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் பேசப்படுவதற்கான களமாக இன்றி, அரசியல் வாதிகளின் முரண்பாடுகளை அரங்கேற்றும் பொதுச்சந்தையாகவே இது காணப்பட்டது.

அதில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன், இணைத்தலைவர்களான கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அமைச்சர் நசீர் அகமட்,இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், இரா.சாணக்கியன், அரச அதிபர் கலாமதி பத்மராசா ஆகியோர் முன்னே அமர்ந்து கொண்டும் ஏனைய மட்டக்களப்பு மாவட்ட அரச திணைக்கள அதிகாரிகள், பொலிஸார், பிரதேச செயலாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் பார்வையாளர்களாகக் கலந்துகொண்ட ஒரு அபிவிருத்திக் குழுக் கூட்டமானது மிகவும் அநாகரிகமாக வாதப்பிரதிவாதங்களுடன் இடம்பெற்றதை ஊடகங்களில் நேரடி ஒளிபரப்பில் காண்பிக்கப்பட்டது.

குறிப்பாக, அபிவிருத்திக் குழுத் தலைவர் சந்திரகாந்தனும், பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் கருத்துகளைக் கூறும்போது ஒவ்வொருவரும் தனிப்பட்ட குரோதங்களை அதில் வெளிக்காட்டிய விதம் "போடா" "வேடா" எனும் இம்சிக்கக்கூடிய வார்த்தைகள் அங்கு மக்கள் பிரதிநிதிகள் என மட்டக்களப்பு மாவட்ட மக்களால் வாக்களித்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்பட்ட இருவரும் நடந்துகொண்ட விதம் ஒட்டுமொத்த மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்களுக்கும் தலைக்குனிவையே ஏற்படுத்தியுள்ளது.

இது கடந்த 25இல் நடந்த கூட்டத்தில் மட்டுமல்ல, கடந்த 2020, பொதுத்தேர்தல் இடம்பெற்ற காலம் தொடக்கம் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்கள், தமிழ்ப் பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெறும் பிரதேச அபிவிருத்திக் கூட்டங்கள் அனைத்திலும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கும் அபிவிருத்திக் குழுத் தலைவர் சந்திரகாந்தன் அல்லது அவரின் பிரத்தியேக செயலாளர் பிரசாந்தனுக்குமிடையில் வாய்த்தர்கம் எழாமல் எந்த ஒரு அபிவிருத்திக் கூட்டங்களும் இடம்பெற்றதாக இல்லை.

அந்தக் கூட்டங்களில் செயலாளர்களாகப் பணிபுரியும் மாவட்ட அரச அதிபரோ, பிரதேச செயலாளர்களோ தாம் அரச அலுவலர்கள் என்பதால் இதனைக் கட்டுப்படுத்த முயற்சி எடுப்பதில்லை. அவர்களும் ஒரு மக்கள் பிரதிநிதிகளிடம் இதனைத் தெரிவிக்க முடியாது.

ஆனால், அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட கிழக்கு மாகாண ஆளுநரால் கூட இந்தக் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பது துயரமானதுதான்.

ஒரு கட்சி மூலமாக பாராளுமன்ற உறுப்பினராக - மக்கள் பிரதிநிதியாகத் தெரிவாகும் ஒருவர் அந்த கட்சி தலைமை கூட்ட ஒழுங்குகள், நடத்தைகள், எவ்வாறு பேசவேண்டும் என்ற விடயங்களை சொல்லிக்கொடுக்கவில்லை என்பதை மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகளில் இருந்து அறிய முடிகிறது.

மாவட்டத்தில் உள்ள அபிவிருத்தி, மாவட்ட தேவைகள், குறைநிறைகள், மாவட்ட நலன் சார் மேம்பாடுகளைப் பேசித் தீர்மானித்து நடைமுறைப்படுத்தும் அபிவிருத்திக்குழுக்கூட்டங்களில் மக்கள் பிரதிநிதிகளின் தனிப்பட்ட குரோதங்களையும், அவர்களின் கட்சிசார் விடயங்களையும் பேசும் இடம் ஒரு அபிவிருத்திக் குழுக்கூட்டம் இல்லை என்ற பொதுவான விதிகளைக்கூட அறியாத மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் உள்ளமை மட்டக்களப்பு தமிழ் மக்களுக்கு சாபக்கேடு.

கடந்த 23ஆம் திகதி கூட்டம் இடம்பெற்ற பின்னர் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஒரு பெண் அரச அலுவலர் கருத்துக் கூறும்போது, தாம் 2010 தொடக்கம் 2020 வரை பல அபிவிருத்திக் கூட்டங்களில் கலந்து கொண்டதாகவும் 2020 தேர்தலுக்குப் பின்னர் இடம்பெறும் சகல மாவட்ட, பிரதேச அபிவிருத்திக் கூட்டங்கள் எல்லாம் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தம்மை பிரபல்யப்படுத்துவதற்கான களமாக கூட்டங்களில் கதைக்கிறார்களே தவிர, மக்கள், சமூகம், மாவட்டம் தொடர்பாக நல்ல விடயங்களை கதைப்பதில்லை என கவலையுடன் கூறியமை காணமுடிந்தது.

உண்மையில் ஒரு மாவட்ட அபிவிருத்திக் கூட்டம் நேரடியாக ஊடகங்களில் காண்பிக்கப்படும்போது மக்கள் பிரதிநிதிகள் தமது கருத்துகளை நாகரிகமாக - ஒழுக்கமாக பேசும் பண்பு அறவே மட்டக்களப்பு மாவட்ட, பிரதேச கூட்டங்களில் இல்லை என்பது கவலைதரும் விடயம்.

## கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சினமன் எயார் திட்டமிடப்பட்ட விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளது



இலங்கையின் முதன்மையான உள்நாட்டு விமான சேவை நிறுவனமான சினமன் எயார், யாழ்ப்பாணத்திற்கு திட்டமிடப்பட்ட விமான சேவைகளை அறிமுகப்படுத்துவதாக சமீபத்தில் அறிவித்தது. இது தீவின் வடக்குப் பகுதியில் உள்ள மிகவும் பிரபலமான நகரத்திற்கு பயணிகளுக்கு எளிதான போக்குவரத்தையும் சிறந்த பயண அனுபவத்தையும் வழங்குகிறது. யாழ்ப்பாணத்திற்கான திட்டமிடப்பட்ட விமான சேவைகள் 16 ஜூன் 2023 முதல் ஆரம்பித்துள்ளன. வாரந்தோறும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (BIA) மற்றும் சிகிரியா விமான நிலையத்திலிருந்து யாழ். சர்வதேச விமான நிலையத்திற்கு ஞாயிறு, செவ்வாய், புதன் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களில் புறப்படும். அதே நேரத்தில், சினமன் எயார் BIA இலிருந்து திருகோணமலை மற்றும் மட்டக்களப்புக்கு தினசரி திட்டமிடப்பட்ட விமான சேவைகளை மீண்டும் தொடங்கும்.

BIA இல் உள்ள பிரத்தியேக உள்நாட்டு முனையத்தில் இருந்து திட்டமிடப்பட்ட விமான சேவைகளை வழங்கும் ஒரே உள்நாட்டு விமான நிறுவனமாக சினமன் எயார் விளங்கிறது. சினமன் எயார் தனது திட்டமிடப்பட்ட விமான சேவையை கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் இடையே விரைவான, தடையற்ற, செலவு குறைந்த, நம்பகமான மற்றும் விவேகமுள்ள பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக துல்லியமாக வடிவமைத்துள்ளது. இந்தத் திட்டமிடப்பட்ட விமான சேவைகள் வேகம் மற்றும் வசதியை உறுதி செய்யும் அதே வேளை, முக்கிய சர்வதேச விமானங்களின் வருகை நேரத்துடன் புறப்படும் நேரங்களைக் கவனித்து பயணிகளை இணைக்கும் போக்குவரத்து நேரத்தைக் கணிசமாகக் குறைக்கிறது.

பயணிகளுக்கான சேவையின் பயன்பாட்டை அதிகப்படுத்துவதற்காக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சினமன் எயார் திட்டமிடப்பட்ட விமான சேவைகள் சிகிரியா வழியாக அனுப்பப்படும். இது இலங்கையின் கலாசார முக்கோணத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விரைவான அணுகலை வழங்குகிறது. பொலன்னறுவை, ஹபரணை மற்றும் தம்புள்ளை போன்ற பிரதேசங்களில் இலங்கையின் கலாசார பாரம்பரியத்தை ஆராயும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிகிரியாவில் நிறுத்தப்படுவதால் யாழ்ப்பாணத்திற்கு இலகுவாகப் பயணிப்பதன் மூலம் இலங்கையின் பல்வேறு கலாசாரங்களை வெளிப்படுத்த முடியும்.

மேலும், கிழக்கு கடற்கரை இடங்களுக்கு திட்டமிடப்பட்ட விமான சேவைகளை மீண்டும் தொடங்குவது திருகோணமலை மற்றும் பாசிக்குடா (மட்டக்களப்பு வழியாக) கடலோர சுற்றுலாத் தலங்களுக்கு விரைவான பயணத்தை வழங்குகிறது. திட்டமிடப்பட்ட விமான சேவைகளுக்கு மேலதிகமாக சினமன் எயார் யாழ்ப்பாணத்திற்கு (மற்றும் இலங்கையில் உள்ள மற்ற அனைத்து விமான நிலையங்களுக்கும்) பிரத்தியேக சார்ட்டர் விமான சேவைகளைத் தொடர்ந்து வழங்குகிறது. இந்த தனியார் சார்ட்டர் விமான சேவைகள் பயணிகளுக்கு இணையற்ற வேகம், சௌகரியம் மற்றும் நெகிழ்வுத்தன்மையை வழங்குகின்றன.

புதிய அபிவிருத்தி குறித்து கருத்து தெரிவித்த சினமன் எயார் இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷோன் டுவைட், "இலங்கையில் மறக்கமுடியாத பயண அனுபவத்துடன் கூடிய விரைவான மற்றும் வசதியான போக்குவரத்து முறையை வழங்குவதற்கும், திட்டமிடப்பட்ட விமான சேவையை அறிமுகப்படுத்துவதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். யாழ்ப்பாணத்திற்கான சேவை அந்த உறுதிப்பாட்டின் சமீபத்திய உதாரணம். எங்களின் விமான சேவைகள் யாழ்ப்பாணத்திற்கு தொந்தரவில்லாத பயணத்தை வழங்குகின்றன. எட்டு மணி நேரத்திற்கும் மேலாக பயணம் செய்யும் சூழ்நிலை காணப்பட்ட நிலையில், எங்கள் விமான நேரம் ஒரு மணி நேரம் மட்டுமே". அவர் தொடர்ந்து கூறுகையில், "எதிர்வரும் நல்லூர் திருவிழாவின் போது குறிப்பாக, இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணிகளின் வருகையை எதிர்பார்க்கும் வகையில் இந்த வெளியீட்டை நாங்கள் திட்டமிட்டுள்ளோம், மேலும் திட்டமிடப்பட்ட விமான சேவைகள் கிடைப்பது விரைவான மற்றும் மகிழ்ச்சியான பயண முறையை வழங்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இலங்கைக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு தனித்துவமான அனுபவத்தை வழங்கும் இலங்கையின் சுற்றுலாத் துறையில் முக்கிய பங்கு வகிக்கும் நிறுவனமாக, நாட்டிலுள்ள பிரபலமான இடங்களுக்கு பிரமாண்டமான வசதியான பயணத்தை வழங்குவதன் மூலம் இலங்கையின் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவதற்கான வழிகளை நாங்கள் தொடர்ச்சியாகத் தேடி வருகிறோம்".

***சினமன் எயார்***

சினமன் எயார் (www.cinnamonair.com), உரிமை மற்றும் இயக்கப்படுவது சாஃப்ரன் ஏவியேஷன் (பிரைவேட்). இது இலங்கையின் மிகப்பெரிய பட்டியலிடப்பட்ட கூட்டு நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி., எம்.எம்.பி.எல்.லெஷர் ஹோல்டிங்ஸ் (Mercantile Merchant Bank Group இன் ஒரு பகுதி) மற்றும் பீனிக்ஸ் வென்ச்சர்ஸ் (பிராண்டிக்ஸ் தலைமை அலுவலகம) ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும். திட்டமிடப்பட்ட விமானங்களுக்கு மேலதிகமாக, சினமன் எயார் இலங்கையில் உள்ள அனைத்து விமான நிலையங்கள் மற்றும் நீர் வானூர்தி நிலையங்களுக்கு மற்றும் இடையில் பட்டய சேவைகளையும் வழங்குகிறது.

தொடர்பு விவரங்கள் - முன்பதிவு குழு, தொலைபேசி: +94 112475475 அல்லது மின்னஞ்சல்: reserves@cinnamonair.com.



# இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் 12 நாடுகளின் தூதுவர்களுடன் எதிர்க்கட்சியிலுள்ள தலைவர்கள் கலந்துரையாடல்





12 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுவர்கள் மற்றும் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்ட குழுவினருடன் விசேட கலந்துரையாடலொன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் கொழும்பில் (25) இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு விசேட விடயங்கள் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டதுடன் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இலங்கையில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துதல், அரசியலமைப்பைப் பாதுகாத்தல் , உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துதல் அரசாங்கத்தின் அப்பட்டமான ஜனநாயகமீறல்,மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்காமை ,ஊழல் எதிர்ப்பு நடவடிக்கையை முறையாக செயல்படுத்தாமை மற்றும் சட்டத்துறையில் எழுந்துள்ள பிரச்சினைகள் என்பன குறித்தும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில் ஐக்கிய அமெரிக்காவின் தூதுவர் திருமதி ஜூஜூலி லை சங், நெதர்லாந்துத் தூதுவர் திருமதி பொனி ஹோர்பச், இந்தியா உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் எப்பல்ரன், அவுஸ்திரேலியாவின் உயர்ஸ்தானிகர் போல் விஸ்லி, பிரான்ஸ் தூதுவர் ஜீன் பிரான்சிஸ், கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ், ஐக்கிய இராச்சியத்தின் பதில் பிரதி உயர்ஸ்தானிகர் லிசா வாண்ஸ்டால், ரோமானியத் தூதுவர் விக்ரர் ச்சியுச்டியா, ஜப்பானிய பிரதி தூதுக்குழுவின் பிரதானி கட்ஸுக்கி கொண்டரோ ,இத்தாலிய பிரதி தூதுக்குழுவின் பிரதானி பிரான்செஸ்க்கோ, ஐரோப்பிய ஒன்றிய அரசியல் விவகாரப் பிரிவு அதிகாரி ஏன் சட்டர்ஜீ ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர் முன்னிலையில் உரையாற்றியதுடன் நாடு எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் விளக்கமளித்தார்.

வேண்டுமென்றே தேர்தலை ஒத்திவைப்பதன் மூலம் ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பாக தூதுவர்கள் மற்றும் உயர்ஸ் தானிகர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அக்கறையின்மையால் அஸ்வெசும போன்ற வேலைத்திட்டங்களும் தோல்வியடைந்துள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,நாட்டின் சுகாதாரத்துறை சீர்குலைந்துள்ளமை, தரமற்ற மருந்துகளால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமை என்பன குறித்தும் சுட்டிக்காட்டினார்.

ஊழலுக்கு எதிராக பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.என்றாலும், ஊழல் மோசடிகள் இன்னும் முடிவுக்கு வந்தபாடில்லை என்றும் சட்டத் துறையில் பல சிக்கல்கள் உள்ளன என்றும் சகல சட்டங்களிலும் குறைபாடுகள் உள்ளதாகவும் இதனால் சட்டத்துறைக் கட்டமைப்பின் தரம் குறைந்துள்ளதாகவும் தூதுவர்களிடம் எடுத்துரைத்தார்.

# ஏமாற்றம் தொடருமாயின் நடைமுறைச் சாத்தியமான தீர்வு பற்றி சிந்திக்க வேண்டும்!

## 13ஆவது திருத்தம் குறித்து ஸ்ரீகாந்தா கருத்து



ஏமாற்றமே தொடரப்போகின்றது என்றால், 13ஆவது திருத்தத்தை முற்றுமுழுதாக மறந்துவிட்டு சாத்தியமான வேறு வழிமுறைகளை அரசியல் ரீதியாக எமது மக்கள் நாட வேண்டியிருக்கும் என தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கட்சி நேற்றுமுன்தினம் (25) வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழான பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவது பற்றி அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியே தீர்மானிக்கப்படும் என ஜனாதிபதி அறிவித்திருக்கின்றார்.

பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதை எதிர்க்கும் சகல தென்னிலங்கை அரசியல் சக்திகளுக்கும் அவர்களுடைய நோக்கம் நிறைவேறுவதற்கான நல்லதோர் சந்தர்ப்பத்தை இந்த பேச்சுவார்த்தைகள் வழங்கப்போகின்றன.

பேச்சுவார்த்தைகளில் எழப்போகும் எதிர்ப்புகளை காரணம் காட்டி, இந்த விடயம் கைவிடப்படலாம் அல்லது கணிசமான காலத்துக்கு ஒத்திவைக்கப்படலாம்.இல்லையேல், பொலிஸ் அதிகாரங்களை வெட்டிக் குறைத்து, வலுவற்றதாக்கி வெறும் கண்துடைப்பாக ஒரு சில அதிகாரங்களோடு மாத்திரம் மாகாண பொலிஸ் படையை நிறுவுவதற்கு சிங்கள கட்சிகளுக்கிடையில் கருத்தொற்றுமை எட்டப்படுவதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

தமிழ் மக்களை பொறுத்தமட்டில் 13ஆவது திருத்தத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களில் எத்தவொரு மீளாய்வுக்கோ அல்லது சமரசத்துக்கோ இடமில்லை. மட்டுப்படுத்தப்பட்ட முறையில் அமைந்திருக்கும் இந்த அதிகாரங்களில் விட்டுக்கொடுப்புகளுக்கு இடமளிக்க முடியாது.

சிங்கள அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத ஆட்சேபனைகளின் அடிப்படையில், இந்த விவகாரத்தில் பிடிவாதம் காட்டினால் மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரங்கள் அர்த்தம் அற்றுப்போய்விடும்.

குறுகிய காலத்துக்குள் 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் காணி, பொலிஸ் அதிகாரங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களின் இருப்போடும் பாதுகாப்போடும் சம்பந்தப்பட்ட இந்த விடயங்களில் இனிமேலும் ஏமாற்றப்பட தமிழ் மக்கள் தயாரில்லை.

ஏமாற்றமே தொடரப்போகின்றது என்றால், 13ஆவது திருத்தத்தை முற்றுமுழுதாக மறந்துவிட்டு சாத்தியமான வேறு வழிமுறைகளை அரசியல் ரீதியாக எமது மக்கள் நாட வேண்டி இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கலாசாலையில் புற்றுநோய் விழிப்புணர்வு கருத்தரங்கு







கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் நூற்றாண்டு விழாவையொட்டி நேற்று (26) இடம்பெற்ற ஒன்றுகூடலில் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய் சத்திர சிகிச்சை நிபுணர்களான டாக்டர் க. ஸ்ரீதரன், டாக்டர் தனுஜா மகேந்திரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

ஆசிரிய மாணவர் சார்பில் உடற்கல்வி பாடநெறி ஆசிரிய மாணவி பூரணி நிஷாந்தன் கருத்துரையாற்றினார்.

உடற்கல்வி பாடநெறி ஆசிரிய மாணவர் சி. தினேஷ்குமார் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

# 60 வயதான பெண் மீது பாலியல் துஷ்பிரயோகம்

## ரம்புக்கனையில் பொலிஸ் சார்ஜன்ட் கட்டிவைக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைப்பு

ரம்புக்கன, பரபே, இஹலகம பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றுக்குள் இரவு நேரத்தில் நுழைந்து அங்கிருந்த 60 வயதுடைய பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கட்டிவைக்கப்பட்ட நிலையில் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டார் என ரம்புக்கனை பொலிஸார் தெரிவித்தனர். ரம்புக்கனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட 60 வயதுடைய பெண் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேகத்தின் பேரில் இந்த சார்ஜன்ட் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.24 ஆம் திகதி இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் கேகாலை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக ரம்புக்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

# வடக்கு ஆளுநரின் மக்கள் தொடர்பாடல் அலுவலகம் வவுனியாவில் திறந்து வைப்பு





வவுனியா நிருபர்

வடக்கு மாகாண ஆளுநரின் மக்கள் ஒழுங்கமைப்பு தொடர்பாடல் அலுவலகம் வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா மாநகரசபை நூலக கட்டடத்தில் குறித்த அலுவலகம் நேற்று (26) திறந்து வைக்கப்பட்டது. குறித்த அலுவலகத்தை வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம்.சாள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன்பந்துல சேன ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஆளுநரை தொடர்பு கொள்வதற்கு யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மக்களின் நலனை கருத்தில் கொண்டு இந்த அலுவலகம் திறந்துவைக்கப்பட்டுள்ளதுடன் வாரநாட்களில் மக்கள் தமது முறைப்பாடுகளை இவ் அலுவலகத்தில் தெரிவிக்க முடியும். மாதத்தில் இரு தடவைகள் ஆளுநர் இங்கு விஜயம் மேற்கொண்டு மக்களை சந்திப்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வாய்பேச முடியாத இளைஞர் கொடூரமாக வெட்டிக்கொலை



வாய்பேச முடியாத இளைஞர் ஒருவர் வாளால் வெட்டிப் படு கொலை செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் குருநாகல் - நாரம் மலை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (25) இரவு இடம்பெற்றுள்ளது. நாரம்மலை பிரதேசத்தைச் சேர்ந்த லசந்த பண்டார (29 வயது) என்பவரே வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளவராவார்.

லசந்த பண்டாரவின் தந்தை மீது தாக்குதல் நடத்த வாள்களுடன் ஒரு குழுவினர் நேற்றுமுன்தினம் இரவு வீட்டுக்கு வந்துள்ளனர். அதன்போது தந்தை, வீட்டின் பின்வாசலால் தப்பியோடிய நிலையில் மகன் மீது குறித்த குழுவினர் தாக்குதல் மேற் கொண்டுவிட்டுச் சென்றுள்ளனர்.

பாரிய வெட்டுக்காயங்களுக்கு ள்ளாகிய வாய்பேச முடியாத லசந்த பண்டார உடனடியாக வைத்தியசா லையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்துவிட்டார்.சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், கொலையாளிகளைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பேராதனை பல்கலைக்கழக மாணவர்களின் கலை விழா









இக்பால் அலி

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் புதிய மாணவர்களை வரவேற்கும் புது வசந்தம் என்னும் தொனிப் பொருளிலான கலை கலாசார விழா பொறியியல் பீட ஈ.ஓ. ஈ.மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் வினோ தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேராதனை மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளரும் பேராதனை போதனா வைத்தியசாலை குழந்தை நல வைத்திய நிபுணருமான சி.கிருஸ்ணபிரதீப் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறை தலைவரும் தமிழ்ச் சங்கத்தின் தலைவருமான பேராசிரியர் சி. பிரசாந்தன், பொருளாளர் கலாநிதி எஸ்.கே.நவரட்ணராஜா, கணக்காய்வாளர் கலாநிதி பாஸ்கரன், கலாநிதி சர்ஜுன், கலாநிதி செ.சுதர்சன் உள்ளிட்ட பல்கலைக்கழக பேராசிரியர்கள்,விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது சங்க வரலாறு, கோலாட்டம், குழு நடனம், குழுப்பாடல், குழு நடனம், தனிப்பாடல், நறுமுகை நூல் வெளியீடு, வில்லுப்பாட்டு, இயல் இசை நாடகம் எனப் பல்கலைக்கழக மாணவ மாணவிகளின் பல தரப்பட்ட கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (26.07.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 217.5138 | 229.5544 |
| கனேடியன் டொலர் | 244.0134 | 256.9546 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 44.4892 | 47.6729 |
| யூரோ | 356.4829 | 373.8080 |
| ஜப்பான் யென் | 2.2887 | 2.3995 |
| சிங்கப்பூர் டொலர் | 242.5538 | 254.9953 |
| ஸ்ரேலிங் பவுன் | 416.4545 | 435.4819 |
| சுவிஸ் பிராங் | 371.2925 | 392.6249 |
| ஐ.அ. டொலர் | 323.6966 | 337.1774 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 873.8075 |
| குவைட் | குவைட் தினார் | 1,073.2283 |
| ஓமான் | ஓமான் றியால் | 855.6167 |
| கட்டார் | கட்டார் றியால் | 90.4134 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 87.8316 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 89.6884 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.07.25
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5186
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,991,928.00
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 8 7 0 8 7 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3428
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 70,329,153.60
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 07 11 42 50

Lucky 7
திகதி 25.07.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0012
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 8 7 9 1 4 6
L7 இலக்கம் 1 8
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,144,071.44

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1216
திகதி 2023-07-25
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 101,579,207.20
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 21 39 43 53
விசேட எழுத்து S

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 495
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,837,885.80
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 35 49 57 60
விசேட இலக்கினம் கும்பம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1534 17057
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 402,356,084.00
ஆங்கில எழுத்து I
சுப்பர் இலக்கம் 19
வெற்றி இலக்கங்கள் 41 49 53 64
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# இருபது அறைகளைக் கொண்ட தொடர் குடியிருப்பில் திடீர் தீப்பரவல்

எஸ்.கணேசன், ஆர். ரமேஸ், பி.கேதீஸ்







நாகசேனை, பம்பரகலை தோட்டப் பிரிவான பெரிய இராணிவத்தை தோட்ட இலக்கம் (01) தொடர் வீட்டுக் குடியிருப்பில் நேற்று முன்தினம்(25) திடீர் தீ விபத்து ஏற்பட்டு பத்து வீடுகள் தீக்கிரையாகியுள்ளன. இதனால் 50 பேருக்கும் மேற்பட்டோர் இருப்பிடவசதியின்றி நிர்க்கதியடைந்துள்ளனர்.

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லிந்துலை - இராணிவத்தை தோட்டத்தில் நேற்றுமுன்தினமிரவு (25) ஏற்பட்ட திடீர் தீ விபத்தால் 20 அறைகளைக்கொண்ட தொடர் குடியிருப்பில் 10 வீடுகள் முற்றாகத் தீக்கிரையாகியுள்ளன. மேலும் சில வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அப்பகுதிக்குப் பொறுப்பான கிராம சேவை அதிகாரி தெரிவித்தார்.

தீப்பரவலையடுத்து மக்கள் கூச்சலிட்டுக்கொண்டு வெளியில் வந்தனர். அதற்குள் தீ வேகமாகப் பரவியது. இந்நிலையில் லிந்துலை பொலிஸாருடன் இணைந்து தோட்டத் தொழிலாளர்கள், பிரதேசவாசிகள் மற்றும் இளைஞர்கள் சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாகப் போராடி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதேவேளை சம்பவ இடத்துக்கு தீயணைப்புப் படையினர் வரவில்லை என அங்குள்ள இளைஞர்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்தினால் தோட்டத் தொழிலாளர்களின் உடைமைகள், பிள்ளைகளின் பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

தீயினால் பாதிக்கப்பட்டோர் தத்தம் உறவினர்களின் வீடுகளிலும் கோயில்களிலும் தோட்ட சிறுவர் பாதுகாப்பு நிலையத்திலும் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, தீ விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் லிந்துலை பொலிஸார், அக்குடும்பங்களின் சேத விபரங்களையும் திரட்டி வருகின்றனர்.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், வீடுகளை இழந்து நிர்க்கதிக்குள்ளானவர்களுக்கு தோட்ட நிர்வாகம் நிவாரண உதவிகளையும் காலை உணவுகளையும் வழங்கியதாகத் தெரியவருகிறது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com




**சவூதி அரேபியத் தூதரகமும் முஸ்லிம் கலாசாரத் திணைக்களமும் இணைந்து தேசிய மட்டத்தில் நடத்திய அல் - குர்ஆன் மனனப் போட்டியில் அக்குறணையைச் சேர்ந்த அல் - ஹாபிழ், அல் - காரி முஹம்மத் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். சவூதி அரேபியாவின் இஸ்லாமிய விவகார அமைச்சு இதற்கான அனுசரணைகளை வழங்கியது. இவர் கண்டி, உடத்தலவின்ன அல் - ஹகீமிய்யா அரபுக் கல்லூரி மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.**

**படங்கள்:** கண்டி நிருபர்

# முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி கட்டடத் திறப்பு விழா நேற்று

என்.மலர்வேந்தன், தனராஜ்



மூலவளங்கள் நிலையம் மற்றும் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட ஊவா மாகாண முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திக் கட்டடத் தை நேற்று (26) ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் திறந்து வைத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைய உலக வங்கியின் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 13 மில்லியன் ரூபா செலவில் ஊவா மாகாணக் கட்டடத் திணைக்களத்தின் தொழில்நுட்ப ஆதரவுடன் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, பதுளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மேஜர் சுதர்ஷன தெனிபிடிய, ஊவா மாகாண பிரதான செயலாளர் தமயந்தி பரணகம, முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் டீ.எம்.சீ. திஸாநாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# நாட்டியப் பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

கண்டி நிருபர்

கண்டியிலுள்ள உதவி இந்தியத் தூதுவராலயம் கதக் நாட்டியப் பயிற்சிகளைப் பெற விரும்புவோர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.நான்கு பிரிவுகளைக் கொண்ட மேற்படி பயிற்சிக்கு பின்வரும் கட்டணங்கள் அறவிடப்படும் என உதவித் தூதரகம் தெரிவித்துள்ளது.

முதலாவது பிரிவு பிரதம பிரிவாகும். இதற்கு 3,000 ரூபாவும் இரண்டாவது பிரிவான மத்திய பிரிவுக்கு 3,500 ரூபாவும் அறவிடப்படும்.

ஏனைய பிரிவுகளான விசாரத பகுதி -1 இற்கு 4,000 ரூபாவும் நான்காம் பிரிவான விசாரத பகுதி-2 இற்கு 4,500 ரூபாவும் அறவிடப்படும்.

விபரங்கள் தேவைப்படுவோர் இல- 1ஏ, மகாமாயா மாவத்தை, கண்டி என்ற முகவரியிலுள்ள இந்திய உதவித் தூதுவராலயத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். மேலும் 081 222 2652 மற்றும் 081 222 3786 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனும் தொடர்பு கொள்ளலாம்.

அல்லது iice.kandy@mea.gov.in என்ற மின்னஞ்சல் ஊடாக விபரங்களைக் கேட்டுப்பெற்றுக் கொள்ளலாம். அல்லது www.ahcikandy.gov.in என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம் என கண்டி உதவி இந்தியத் தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

# மலையக பிரதேசங்களுக்கான பணிப்பாளர்கள் நியமனம்

கண்டி நிருபர்



அப்துல் கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளையின் மலையக பிரதேசங்களுக்கான பணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர்.

மாத்தளையில் அமைந்துள்ள மகாத்மா காந்தி நினைவு மண்டபத்தில் அண்மையில் (22) இடம் பெற்ற இதுதொடர்பான வைபவத்தில் மாத்தளை மாவட்டப் பணிப்பாளராக எஸ். ரவிகுமார் நியமிக்கப்பட்டார். அவருக்கான நியமனக் கடிதத்தை அப்துல் கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளையின் இலங்கைக் கிளைத் தலைவர் தேசமாண்ய என். கருணாகரன் கையளித்தார். இந்நிகழ்வில் அப்துல் கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களான கர்னல் சுதேஸ் இயகம, எம்.எச்.எம். பாரூக் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# பெண்ணின் சடலம் கண்டெடுப்பு

கண்டி நிருபர்

கண்டி, சுதுஹம்பொல பிரசேத்தில் பெண்ணொருவரின் சடலம் செவ்வாய்க்கிழமை (25)கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கண்டி பொலிஸ்பிரிவுக்குட்பட்ட சுதுஹம்பொல பிரதேசத்தில் அறையொன்றில் தனியாக வசித்துவந்த திருமணமாகாத 52 வயதான பெண்ணொருவரே மர்மமான முறையில் இறந்த நிலையில் சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோட்டல் ஒன்றில் வேலை செய்வதற்காக கண்டிப் பிரதேசத்தில் தங்கியிருந்த இவர்,சில வருடங்களுக்கு முன்னர் சுதுஹம்பொல பிரதேசத்துக்கு வந்து அங்குள்ள ஒரு காணியில் தற்காலிக வீடொன்றை நிர்மாணித்து தனியாக வசித்து வந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் வசித்த அந்த அறையில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக அப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவல்களின் பிரகாரம் அங்கு சென்ற பொலிஸார் பெண்ணொருவர் இறந்திருப்பதைக் கண்டுள்ளனர்.

இந்தப் பெண் சுமார் ஐந்து நாட்களுக்கு முன்னர் மரணமடைந்திருக்கலாம் எனத் தெரிவித்த பொலிஸார், மரண பரிசோதனைக்காக சடலத்தை கண்டி தேசிய வைத்தியசாலையில் வைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி நல்லூர் ஆலயத்துக்கு விஜயம்



யாழ். நிருபர்

பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி கர்தினால் பிறைன் உடக்குவே யாழ்ப்பாணம் மறைமாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், நேற்று முன்தினம் (25) செவ்வாய்க்கிழமை மாலை நல்லூர் ஆலயத்துக்கு சென்றிருந்தார்.

யாழ்ப்பாணம் யாக்கப்பர் ஆலய திருவிழாவில் கலந்துகொள்வதற்காக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த கர்தினால் பிறைன் உடக்குவே, யாழ். மறைமாவட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொதுமக்களையும் சந்தித்துள்ளார்.

# ஊர்காவற்றுறை - காரைநகர் படகுப்பாதை ஓட்டி போதையில் பயணிகளுடன் அட்டகாசம்

யாழ். நிருபர்



யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை - காரைநகருக்கிடையில் சேவையில் ஈடுபடும் படகுப்பாதை ஓட்டி, மது போதையில் பாதையில் பயணித்தவர்களுடன் தகாத வார்த்தைகளைப் பேசி முரண்பட்டதுடன் அரச உத்தியோகத்தர் ஒருவரையும் தாக்கியுள்ளார்.

ஊர்காவற்றுறையிலிருந்து காரைநகர் நோக்கிப் பயணித்த படகுப்பாதையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

படகுப்பாதையில் கடமை நேரத்தில் மேலங்கி அணியாது, அரை நிர்வாணமாக மது போதையில் நின்று பயணத்தில் இருந்த அரச ஊழியர்கள், பொதுமக்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்டதுடன், அரச ஊழியர்களுடன் தகாத வார்த்தைகளைப் பேசி ஊழியர் ஒருவரையும் தாக்கியுள்ளார். பிரதேச செயலகம் மற்றும் நீதிமன்றங்களில் பணியாற்றும் பெண்கள் உட்பட பலரும் பாதையில் பயணத்தில் ஈடுபட்டபோது குறித்த சம்பவம் இடம்பெற்றமை பலரையும் முகஞ்சுழிக்க வைத்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மற்றும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் ஆகியோருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# தோணிக்கல்லில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் காயமடைந்த இளைஞரும் உயிரிழப்பு

வவுனியா நிருபர்



வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சைபெற்றுவந்த இளம் குடும்பஸ்தரான இளைஞன் ஒருவரும் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வவுனியா, தோணிக்கல் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த குழுவொன்று வாள்வெட்டுத் தாக்குதலில் ஈடுபட்டதுடன் குறித்த வீட்டை பெற்றோல் ஊற்றி எரியூட்டியிருந்தது.

இச்சம்பவத்தின்போது மூச்சுத்திணறல் ஏற்பட்டு இரண்டு மாத கர்ப்பிணியான 21 வயதான பாத்திமா என்ற இளம் குடும்பப்பெண் சம்பவ இடத்திலேயே மரணமடைந்ததுடன், 10 பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

அவர்களுள், மரணமடைந்த பெண்ணின் கணவன் பலத்த தீக்காயங்களுக்குள்ளாகி சிகிச்சைபெற்று வந்த நிலையில், அவரது உறவினர்களின் வேண்டுதலின் அடிப்படையில் வவுனியா வைத்தியசாலையிலிருந்து திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணம் தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு மாற்றப்பட்டிருந்தார்.

எனினும், சிகிச்சை பலனின்றி நேற்று (26) அதிகாலை அவர் உயிரிழந்தார். இளம் குடும்பப் பெண்ணின் கணவரான வவுனியா, உக்குளாங்குளம் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ச.சுகந்தன் என்பவரே மரணமடைந்துள்ளார்.

அவரது சடலத்தை வவுனியாவுக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை அவரது உறவினர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மட்டுவிலில் உருக்குலைந்த நிலையில் மூதாட்டியின் சடலம் மீட்பு

சாவகச்சேரி நிருபர்

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் வடக்கு கிராமத்தில் தனிமையில் இருந்த வயோதிபப் பெண்ணொருவர் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டுவில் அம்மன் ஆலயத்துக்கு முன்பாக உள்ள காணியில் தற்காலிக கொட்டிலில் தனியாக வசித்துவந்த 82 வயதான மூதாட்டி ஒருவரே நேற்று (26) புதன்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சில நாட்களாக மூதாட்டியின் நடமாட்டத்தைக் காணாத நிலையில் ஊரவர்கள் குடிசைக்குள் சென்று பார்த்தபோதே மூதாட்டி சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கிராம மக்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்திய நிலையில் மூதாட்டியின் மரணம் கொலையா அல்லது இயற்கையானதா எனப் பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த 82 வயதான தம்பையா சரோஜா என்ற மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

# கனேடிய பிரதமரின் அறிக்கையை ஈழத் தமிழர்கள் வரவேற்கின்றனர்

## வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்

வட்டுக்கோட்டை நிருபர்

கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கறுப்பு ஜூலை 40 ஆண்டு நினைவேந்தலில் வெளியிட்ட அறிக்கையை ஈழத் தமிழர்கள் வரவேற்கின்றனர் என வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்தார்.

அவர் நேற்றைய தினம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசாங்கம் மனித உரிமை மீறல்கள், அட்டூழியங்கள் போன்றவற்றுக்கு பொறுப்புக் கூற வேண்டும். கறுப்பு ஜூலை படுகொலைகள் அரசியல் பேராசை காரணமாக மிகப் பெரும் மனிதப் பேரவலத்தை உருவாக்கியது. இவ்வாறான மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும்.

கறுப்பு ஜூலை படுகொலையை அன்றைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி இந்தியப் பாராளுமன்றத்தில் 1983 இல் இனப்படுகொலை என அறிவித்ததுபோன்று கடந்த மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் அந்த நாளை தமிழினப் படுகொலை நாள் என கனேடியப் பாராளுமன்றத்தில் ஏகமனதாகப் பிரகடனப்படுத்தினார் பிரதமர் ட்ரூடோ. இதனை தமிழ் மக்களின் நீதிக்கான கதவு திறப்புக்கான ஆரம்பமாக தமிழர்கள் பார்க்கின்றனர். தொடர்ந்து பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் நியாயமான நீதிக்கு குரல் கொடுக்கும் கனேடியப் பிரதமரின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மன ஆறுதலை வழங்கியுள்ளது.

இலங்கையில் சிங்கள இனவாதிகளின் கனேடிய அரசாங்கம் தொடர்பான அநாகரிகமான விமர்சனங்கள் வருவதை பொருட்டாகக்கொள்ளாது மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை வலியுறுத்தி உள்ளமையை வரவேற்கின்றோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மாயமானார் சீன வெளியுறவுத்துறை அமைச்சர்

# தகவல் கிடைக்காததால் அதிரடியாக பதவி நீக்கம்



காதல் விவகாரம் காரணமாக மாயமானதாகக் கூறப்பட்டு வந்த சீனாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் கின் கேங் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்.

சீன அரசியலில் வளர்ந்து வரும் நட்சத்திரமாக அறியப்பட்டவர் வெளியுறவு அமைச்சர் கின் கேங் (57). இவர் கடந்த ஜூன் 25 ஆம் திகதிதி இலங்கை, ரஷ்யா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளை சந்தித்துப் பேசினார். அதன் பிறகு கடந்த மூன்று வாரங்களாக அவர் பொதுவெளிக்கு வரவில்லை. அரசு சார்ந்த எந்த நிகழ்வுகளிலும் அவர் கலந்துகொள்ளவும் இல்லை.

கின் கேங் இருப்பிடம் தொடர்பான எந்தத் தகவல்களையும் இதுவரை சீன வெளியுறவு அமைச்சகமும் வெளிப்படையாக வெளியிடவில்லை. இதனைத் தொடர்ந்து 'எங்கே கின் கேங்?' என்று சர்வதேச ஊடகங்களும் மக்களும் கேள்வி கேட்கத் தொடங்கினர். கின் கேங் மாயமானதற்கு பத்திரிகையாளர் ஃபூ சிஸாடியானுடன் அவர் கொண்ட காதல்தான் காரணம் எனக் கூறப்பட்டது.

இந்த நிலையில், சீன அமைச்சரவையிலிருந்து கின் கேங் நீக்கப்பட்டிருக்கிறார். சீன வெளியுறவு அமைச்சராக பதவியேற்று 7 மாதங்களே ஆன நிலையில், கின் நீக்கப்பட்டிருக்கிறார். கின் கேங்குக்கு பதிலாக வாங் யி வெளியுறவுத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பதவி நீக்கம் குறித்து சீனாவின் சினுவா செய்தி நிறுவனம் "வாங் யி-யை வெளியுறவு அமைச்சராக நியமிக்க சீனாவின் உயர்மட்ட சட்டமன்றம் வாக்களித்தது. கின் கேங் வெளியுறவுத் துறை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்" என்று செய்தி வெளியிட்டுள்ளது. கின் கேங் நீக்கப்பட்டதற்காக காரணத்தை சீன அரசு இதுவரை தெரிவிக்கவில்லை.

# இலங்கை கடற்படையை கண்டித்து இராமநாதபுரத்தில் மீனவர் மாநாடு

### முதல்வர் ஸ்டாலின் பங்கேற்பதாக அறிவிப்பு



தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவதைக் கண்டித்து இராமநாதபுரத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் 18 ஆம் திகதி மாநாடு ஒன்றை நடத்து வதற்கு மீனவர் சங்கங்கள் தீர்மானித்துள் ளன. அதில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அமைச்சர் அனிதா இராதாகிருஷ்ணன் நேற்றுமுன்தினம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது, இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்படுவது, தாக்கப்படுவது, அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவது போன்ற நடவடிக்கைகளை கண்டித்தும் அதனை தடுக்கக் கோரியும் மேலும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் அனைத்து மீனவர் சங்கங்கள் சார்பில் இராமநாதபுரத்தில் ஓகஸ்ட் 18 ஆம் திகதி மாநில மாநாடு நடத்தப்படவுள்ளது.இந்த மாநில மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்க வேண்டும் என மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் அழைப்பு விடுத்துள்ளனர். இதை ஏற்று, மாநாட்டில் பங்கேற்க முதல்வர் ஒப்புதல் அளித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலக செய்திகள்




ட்விட்டரின் பெயர் மாற்றப்பட்டதையடுத்து அமெரிக்காவின் கலிபோர்னியாவில் அமைந்துள்ள தலைமையகத்தில் அதன் பெயரை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.



இத்தாலியின் மிலான் நகரில் கடும் காற்றுடன் பெய்த அடைமழையினால் பாரிய மரம் ஒன்றின் கிளை முறிந்து விழுந்து பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

# தென்னாபிரிக்காவில் இரு பஸ்கள் விபத்து

### 77 பேர் காயம்




தென்னாபிரிக்காவில் பல்கலை மாணவர்களை ஏற்றிச்சென்ற பஸ், மற்றுமொரு பஸ் வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 77 பேர் காயமடைந்துள்ளனர். தென்னாபிரிக்காவின் தலைநகர் ஜோகன்ஸ்பர்க்கில் பிரதான பல்கலைக்கழகம் அமைந்துள்ளது.

இங்குள்ள மாணவர்களை ஏற்றிக்கொண்டு கல்லூரி பஸ் சென்று கொண்டிருந்தது. பல்கலைக்கழகத்தின் முன்பு வந்தபோது எதிரே வந்த மற்றொரு பஸ் இதன்மீது நேருக்கு நேர் மோதியது.

இந்த விபத்தில் மாணவர்கள் உட்பட 77 பேர் படுகாயமடைந்தனர். இதனையடுத்து மீட்புப்படையினர் சம்பவ இடத்துக்குச் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். அப்போது படுகாயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# அவுஸ்திரேலியாவில் திடீரென உயிரிழக்கும் திமிங்கிலங்கள்



அவுஸ்திரேலியாவின் மேற்கு கடற்கரையில் 51 பைலட் திமிங்கிலங்கள் உயிரிழந்துள்ளமை சூழலியலாளர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் நூற்றுக்கும் மேற்பட்ட திமிங்கிலங்கள் கரையொதுங்கியுள்ளதுடன் அவற்றைக் காப்பாற்றுவதற்கு அந்நாட்டு அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அவுஸ்திரேலியாவின் செயின்ஸ் கடற்கரையில் ஒதுங்கியுள்ள திமிங்கிலங்களுக்கு சிகிச்சையளித்து மீண்டும் கடலுக்குள் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் அவை கரையொதுங்குவதற்கான காரணங்கள் தொடர்பில் தகவல் வெளியிடப்படவில்லை.

நேற்றுமுன்தினம் மாலை முதல் அவை கரையை நோக்கி வரத் தொடங்கியுள்ளன. அன்றைய பொழுதில் கடற்கரையின் ஒரு பகுதி முழுவதும் திமிங்கிலங்களால் நிறைந்திருந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# முன்னாள் ஜனாதிபதிமாருக்கு வழங்கப்பட்ட மேலதிக சலுகைகளை இரத்துச் செய்த அரசு



ஜனாதிபதி சிறப்புரிமைச் சட்டத்துக்குப் புறம்பாக முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த சலுகைகளை நிறுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி சிறப்புரிமைச் சட்டத்தின் பிரகாரம் முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு ஓய்வூதியம், வீடு, மூன்று வாகனங்கள், எரிபொருள் மற்றும் தனிப்பட்ட செயலாளர் ஆகியன மட்டுமே உரித்துடையது. ஆனால் கடந்த காலங்களில் தண்ணீர்க் கட்டணம், மின்சாரக் கட்டணம் செலுத்துதல் உள்ளிட்ட பல சலுகைகள் முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளின் கீழ் சேர்க்கப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை கேள்விக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பிலிருந்து ஜனாதிபதி சிறப்புரிமைகள் சட்டத்தின் பிரகாரம் செயற்படுமாறு அரசாங்கத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, இனிமேல் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சிறப்புரிமை வழங்கும்போது, ஜனாதிபதி சிறப்புரிமைச் சட்டத்துக்குப் புறம்பாக வழங்கப்பட்டுள்ள விடயங்கள் வெட்டப்பட வேண்டும் என அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# யானைகளிடமிருந்து மக்களை பாதுகாக்குமாறு கோரி சவப்பெட்டியை வீதியில் வைத்து மக்கள் போராட்டம்



மக்களை யானைகளிடமிருந்து பாதுகாக்குமாறு கோரி சவப்பெட்டியை வீதியில் வைத்துக்கொண்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அனுராதபுரம் மாவட்டம் ஹொரவப்பொத்தான பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நபடவெவ கிராமத்தில் காட்டு யானையின் தாக்குதலினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை பெண்ணொருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் செவ்வாய்க்கிழமை நல்லடக்கம் செய்யப்படுவதற்காக கொண்டு செல்லும்போது கிராம மக்கள் சவப்பெட்டியை வீதியில் வைத்துக்கொண்டு அரசாங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தங்களுக்கு யானையினால் பாதுகாப்பு வழங்குமாறு கோரி கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யானையின் அட்டகாசம் தொடர்பில் பல தடவைகள் அரச அதிகாரிகளிடம் தெரியப்படுத் தியும் எதுவித நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை யானைக்கு வழங்கப்படும் அந்தஸ்து கூட மக்களுக்கு வழங்கப்படுவதில்லை எனவும் யானை தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியும் பொலிஸார் தாமதமாகவே சம்பவ இடத்திற்கு வருகை தந்ததாகவும் அக்கிராம மக்கள் தமது கவலையை வெளிப்படுத்தினர்.

# பட்டதாரி ஆசிரியர் ஆட்சேர்ப்பு பூர்வாங்க நடவடிக்கை ஆரம்பம்

*எம்.எஸ்.எம்.முன்தஸிர்*

தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதன் பிரகாரம் பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வது தொடர்பான நியமன ஒழுங்குகள் மற்றும் நடைமுறைகள் சம்பந்தமாக கல்வி அமைச்சின் செயலாளரினால் மாகாணங்களின் கல்வி அமைச்சுச் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.இதில் மத்திய அரசின் தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகள் வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்பு முறைமை வழிமுறைகள் தொடர்பில் விளக்க மளிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனங்கள் தொடர்பாக அரச சேவை ஆணைக்குழுவின் கருத்துக்களுக்கு உடன்பட்டு அவசியமான போது ஆணைக் குழுவின் கருத்துக்களைப் பெற்று ஆசிரியர் நியமனத்துக்கான திட்ட முறைமையை மேற்கொள்ளுமாறும் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் அறிவித்துள்ளார்.

மேற்படி பட்டதாரி ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பின்போது அதற்கான விண்ணப்பம் நிறைவடையும் திகதியில் முப்பத்தைந்து வயதுக்குட்பட்ட பட்டதாரிகளை உள்ளீர்க்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேசிய பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சும் மாகாண பாடசாலை வெற்றிடங்களுக்கு மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் மூலமும் விண்ணப்பங்கள் கோரப்படும்.

கல்வி அமைச்சு செயலாளரின் 06/2021 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 28.04.2021 ஆம் திகதியிலிருந்து வெற்றிடங்கள் கணக்கிடுதல் செய்யப்படவுள்ளது. மாகாணங்கள் ரீதியிலும் அனுமதிக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையும் மாகாண கல்விச் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு நன்கொடையாக 8300 மெட்ரிக் தொன் யூரியா

### உலக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் தீர்மானம்



8300 மெட்ரிக் தொன் யூரியா உரத்தை இலங்கைக்கு நன்கொடையாக வழங்க உலக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

இந்த யூரியா உரத்தொகையானது பெரும்போகத்தில் ஒரு ஹெக்டேயருக்கும் குறைவாக பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் குருணாகல் மாவட்டத்திலும் உள்ள விவசாயிகளுக்கு இந்த உரம் வழங்கப்படவுள்ளதாக உலக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த செயற்றிட்டத்துக்கு ஜப்பான் அரசாங்கம் நிதியுதவி வழங்கவுள்ளது.

இதுவரை பல்வேறு சந்தர்ப்பங்களில் நாட்டின் விவசாயிகளுக்கு 15000 மெட்ரிக் தொன் வரையான யூரியா உரம், உலக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தினால் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

# டயானா கமகே வழக்கில் நீதிபதிகள் வேறுபட்ட தீர்ப்பு

டயானா கமகேவின் குடியுரிமை விவகாரம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் அடங்கிய அமர்வு முன்னிலையில் விசாரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் செவ்வாய்க்கிமை தீர்மானித்துள்ளது.

இந்த மனுவில், சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பிரித்தானிய பிரஜை என்பதால் பாராளுமன்ற உறுப்பினராக இருக்க தகுதியற்றவர் என அறிவிக்க உத்தரவிடுமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் எம்.ஏ.ஆர்.மரிக்கார் ஆகியோர் அடங்கிய இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு இந்த மனுவை விசாரித்தது. எனினும் இருவரும் வேறுபட்ட தீர்ப்புக்களை வழங்கியுள்ளதால் இந்த வழக்கு மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு முன் விசாரிக்கப்படவுள்ளது.

இந்த மனுவை எதிர்வரும் செப்டெம்பர் 14 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் திகதி நிர்ணயித்துள்ளது.

# ஒட்சிசன் சிலிண்டர்களை திருடி விற்று சூதாட்டத்தில் ஈடுபட்ட ஊழியர் கைது

### அநுராதபுரம் வைத்தியசாலையில் சம்பவம்

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு வழங்கப்படும் ஒட்சிசன் சிலிண்டர்களை திருடி குறைந்த விலைக்கு விற்பனை செய்து, அந்தப் பணத்தில் சூதாட்டத்தில் ஈடுபட்ட அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் ஒட்சிசன் சிலிண்டர் அறைக்குப் பொறுப்பாளராக இருந்த ஒருவர் கைது செய்யப்பட்டதாக அநுராதபுரம் பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் ஒட்சிசன் சிலிண்டர் அறைக்குப் பொறுப்பாக இருந்த 47 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கடந்த சில காலமாக இந்தத் திருட்டை மேற்கொண்டு வந்துள்ளதாகவும் நேற்றுமுன்தினம் (25) தலாவ பிரதேசத்தில் ஒருவருக்கு 4 அடி உயர ஒட்சிசன் சிலிண்டர்களை 60,000 ரூபாவுக்கு விற்பனை செய்யச் சென்றபோது மூன்று ஒட்சிசன் சிலிண்டர்களுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இதற்கு முன்னர் கஞ்சா கடத்தலில் ஈடுபட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பணி இடைநிறுத்தப்பட்டு பணிக்கு திரும்பியவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# இயந்திரப் படகுகள் மூலம் மீன்பிடிப்போரை கைதுசெய்ய உரிய தரப்பினருக்கு உத்தரவு

## பொத்துவில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

திகாமடுல்ல செய்தியாளர்

பொத்துவில் கரைவலை மீனவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கடல் ஒதுக்குப் பிரதேசத்தினுள் இயந்திரப் படகுகள்மூலம் மீன்பிடிக்கின்றவர்களை உடனடியாக கைதுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கும் மீன்பிடித் திணைக்கள அதிகாரிகளுக்கும் எஸ்.எம்.எம்.முஷாரப் எம்.பியினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை(25) இடம்பெற்றது.

இதன்போது இவ்வருடத்தில் பொத்துவில் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள கல்வி, சுகாதாரம், வீதி அபிவிருத்தி, விவசாயம், நீர்ப்பாசனம், காணி, விளையாட்டு, கட்டுமான வேலைத்திட்டங்கள், சுற்றுலாத்துறை செயற்றிட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் அதற்கான அனுமதியும் விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானங்களும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவினால் வழங்கப்பட்டது.

பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.எம்.பிர்னாஸின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன், பொத்துவில் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எம்.எச்.அப்துல் றஹீம், இணைப்பாளர் எம்.எஸ்.முபாரக், உயரதிகாரிகள், திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச சபைச் செயலாளர், சமூக நிறுவனங்களின் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பொத்துவில் பிரதேசத்துக்கான பொது விளையாட்டு மைதானம் அமைக்கப்படுவதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள இடத்துக்கான காணி அரச காணியா அல்லது தனியாருக்குச் சொந்தமான காணியா? என்பதை இன்னும் இரண்டு வாரத்துக்குள் காணி உரிமைத்துவம் சம்பந்தமான ஆதாரங்களை பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு முசாரப் எம்.பி. பிரதேச செயலாளருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

மேலும், மக்கள் ஆண்டாண்டு காலமாகப் பராமரித்து வருகின்ற காணிகளுக்குள் அனுமதி இன்றி அத்துமீறி தலையிடுவதை வேறு திணைக்களங்கள் உடனடியாக தவிர்த்துக் கொள்ளுமாறும் குறித்த பயனாளிகளுக்கு காணி



உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை துரிதப்படுத்துமாறும் உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அறுகம்பை பழைய பாலம் அமைந்துள்ள இட அமைவுச் சூழலில் சூரியன் மறைகின்ற அழகியலை உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயணிகளை கவரும் முகமாக சன்சட் வியு பார்க் அமைப்பதற்கான ஏற்பாடுகளை விரைவாக செய்யுமாறு UDA மற்றும் RDA அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டது.

பொத்துவில் பிரதேச சபைக்கான விலங்கறு களத்தின் (மடுவம்) சுகாதார நிலைமையை கருத்திற்கொண்டு பொதுமக்களுக்கு அசௌகரியங்களை விளைவிக்கும் தன்மைகளில் இருந்து மாற்றியமைப்பதற்கான பிறிதொரு இடத்தில் விலங்கறு களத்தை முன்னெடுப்பதற்காக சுகாதாரத் தரப்பினர் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கவும் இதன்போது தீர்மானம் எடுக்கப்பட்டது.

# தைபா அரபுக் கல்லூரியின் இரண்டாவது பட்டமளிப்பு விழா





சாய்ந்தமருது செய்தியாளர்

சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரியின் இரண்டாவது பட்டமளிப்பு விழா சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் புதன்கிழமை(26) நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் மௌலவி எஸ்.எச். ஆதம்பாவா மதனி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ்ஸைச் சேர்ந்த கொடைவள்ளல் ஐயூப் அஸ்ஸர் ஊனி பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்ததுடன் மற்றும் சில அரேபிய பிரமுகர்களும் பங்கேற்றிருந்தனர்.

இவர்கள் பொல்லடி, கஸீதா, பைத் உள்ளிட்ட முஸ்லிம் கலாசார பாரம்பரியங்களுடன் கல்லூரி நிர்வாகத்தினரால் வரவேற்கப்பட்டனர். காத்தான்குடி ஜாமியா சித்தீக்கியா அரபுக் கல்லூரி முதல்வர் அஷ்ஷெய்க் எம்.ஐ.அப்துல் கபூர் மதனி பட்டமளிப்பு பிரசங்கத்தை நிகழ்த்தினார். இதன்போது 31 மாணவிகள், மௌலவியா பட்டத்தைப் பெற்றுக்கொண்ட அதேவேளை, அதிதிகளினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இக்கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கல்விக் கல்லூரி என்பவற்றுக்கு அனுமதி பெற்று, உயர்கல்வி கற்கும் 19 மாணவிகள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், கல்லூரி மட்ட பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட மாணவிகள் பலர் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. நிகழ்வின் பிரதம அதிதி ஐயூப் அஸ்ஸர் ஊனி மற்றும் அரேபிய பிரமுகர்கள், கல்லூரி அதிபர் மற்றும் நிர்வாகத்தினரால் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.சலீம் உட்பட அரச அதிகாரிகள், கல்வியியலாளர்கள், உலமாக்கள், பாடசாலைகளின் அதிபர்கள், பள்ளிவாசல்களின் தலைவர்கள், நிறுவனங்களின் பிரதிநிதிகள், தைபா அரபுக் கல்லூரி விரிவுரையாளர்கள், மாணவிகள் மற்றும் பெற்றோர்களும் பங்கேற்றிருந்தனர்.





மர்ஹூம் கலாநிதி ஏ.ஆர்.மன்சூரின் ஆறாவது நினைவுதினம் செவ்வாய்க்கிழமை (25) அனுஷ்டிக்கப்பட்டது. அன்றையதினம் அவருக்காக வேண்டி கத்முல் குர்ஆன் நிகழ்வு மற்றும் விசேட துஆப் பிரார்த்தனைகள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும் கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகரும் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூர் தலைமையில் நடைபெற்றன.

**படங்கள்:** அம்பாறை மாவட்ட செய்தியாளர்

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



மண்முனைப்பற்று இந்து ஆலயங்களின் அறங்காவலர் சபையினருக்கான விசேட செயலமர்வு ஆரையம்பதி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை(23) இடம்பெற்றது. பிரதேச செயலாளர் என்.சத்தியானந்தி தலைமையில் இடம்பெற்ற இச்செயலமர்வில் மண்முனைப்பற்றிலுள்ள இந்து ஆலயங்களில் சுயவிபரம் மற்றும் அபிவிருத்திப் பணிகள், ஆலயங்கள் நிதிகளை கையாளுதல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதுடன் ஆலயங்கள் செய்யவேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. **படம்:** ஆரையம்பதி செய்தியாளர்



மட்./ஆரையம்பதி மகாவித்தியாலயத்தில் சிறுவர் பாதுகாப்பு குழு அமைக்கப்பட்டு அக்குழுவில் இணைந்துகொண்ட மாணவர்களுக்கும் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் அடையாள அட்டை அணிவிக்கும் நிகழ்வு அதிபர் சு.நந்தகோபால் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.ஹரிஹரராஜ் மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஏ.ஆர்.நிஷா ஆகியோர் கலந்து கொண்டனர். **படம்:** ஆரையம்பதி செய்தியாளர்



முஸ்லிம்களின் முதல் மாதமான முஹர்ரம் மாதத்தை சிறப்பிக்கும் வகையில் கல்வி அமைச்சின் சுற்று நிருபத்துக்கமைய பாடசாலைகளில் சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில், ஓட்டமாவடி கல்விக் கோட்டத்துக்குட்பட்ட மாவடிச்சேனை அல் இக்பால் வித்தியாலய மாணவிகளுக்கு புதுவருட முஹர்ரம் மாத சிறப்பு நிகழ்ச்சிகள் செவ்வாய்க்கிழமை (25) இடம்பெற்றன. பாடசாலை அதிபர் எம்.சீ.எம்.ஐயூப்கான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாணவர்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

**படம்:** மீராவோடை செய்தியாளர்



அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட சமுர்த்தி பயனாளி ஒருவருக்கு வீட்டு லொத்தர் சீட்டிழுப்பு மூலம் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான காசோலையை முகாமைத்துவப் பணிப்பாளர் ரி.பரமானந்தம் வழங்கி வைத்தார். இதன்போது சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமீத், கருத்திட்ட முகாமையாளர் எஸ்.எல்.அஸிஸ், விடய உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம்.உனைஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். **படம்:** திராய்க்கேணி செய்தியாளர்

# மருதமுனை பழீல் மௌலானா பவுண்டேஷன் நடத்திய கட்டுரைப் போட்டி விருது விழா





























பி.எம்.எம்.ஏ.காதர், ஏ.ஆர்.நபாயிஸ்

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி மருதமுனை பழீல் மௌலானா பவுண்டேஷன் மற்றும் The Book Club புத்தகக்கழகமும் இணைந்து கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மற்றும் அரபுக்கல்லூரி மாணவர்களின் எழுத்தாற்றலை விருத்திசெய்யும் நோக்கில் நடத்திய கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கான விருது விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை 09ஆம் திகதி காலை மருதமுனை பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பவுண்டேஷனின் இணைப்பாளர் சட்டத்தரணி எம்.இஸட் எம். ருடானியின் ஒழுங்கமைப்பில் மிகவும் விமர்சையாக நடைபெற்ற இந்நிகழ்வில், மர்ஹூம் எம்.எம்.முஸ்தபா அதிபர் நினைவரங்கில் நடைபெற்ற விருது விழாவில் பிரிவு-1, பி-2, பிரிவு-3களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் ஒவ்வொரு பிரிவிலும் தலா பத்து மாணவர்களுக்கு ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

பவுண்டேஷனின் கௌரவ தலைவரும் கல்முனை குவாசி நீதிமன்ற நீதிபதியும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எவ்.எம்.அன்சார் மௌலானாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம், விசேட அதிதிகளாக தென்கிழக்குப் பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர் கலாநிதி சத்தார் எம் பிர்தௌஸ் மற்றும் சிலோனிக்ஸ் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் இர்பான் பன்னாஹ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் நிகழ்ச்சிகள் பிரிவின் சிரேஷ்ட நிகழ்ச்சித் தயாரிப்பாளராக 28 ஆண்டுகள் கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற ஊடகவியலாளர் மபாஹிர் மஷூர் மௌலானாவுக்கு மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரும் பழீல் மௌலானா பவுண்டேஷனின் தவிசாளருமான அஷ்-ஷெய்க் அஹமத் அன்சார் மௌலானா(நளீமி) பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். அத்துடன், பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் விருது வழங்கி கௌரவித்தார்.

எழுத்தாளரும் சமூக செயற்பாட்டாளருமான சிராஜ் மஷூர் 'வாசிப்பு கலாசாரமும் புதிய மாணவர் சமூகமும்' எனும் தலைப்பில் உரையாற்றினார். பவுண்டேஷனின் செயலாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எம்.எம்.ஜமால்டீன் நிகழ்வை நெறிப்படுத்திய அதேவேளை, அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ரீ.எம்.சதாம் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார்.

# டெங்கு உணர்குறிகள், சிகிச்சை தொடர்பில் பயிற்சிப்பட்டறை



மாளிகைக்காடு செய்தியாளர்

கல்முனை பிராந்தியத்தில் டெங்கு நோய்த்தாக்கம் அதிகரிக்கலாம் என்ற கள ஆய்வு அறிக்கைகளுக்கமைவாக டெங்கு உணர்குறிகள் மற்றும் வெற்றிகரமான சிகிச்சை தொடர்பில் விசேட பயிற்சிப்பட்டறையொன்று செவ்வாய்க்கிழமை(25) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக பிராந்திய தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சீ.எம்.பசாலினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குறித்த பயிற்சிப்பட்டறையில் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ. அப்துல் வாஜித் டெங்கு ஒழிப்பின் அவசியம் பற்றியும் இந்நோயை முன்னரை விட அதிகம் எதிர்த்துப் போராடவேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தினார்.

மேலும், வளவாளராக கலந்து கொண்ட பொது வைத்திய நிபுணர் டாக்டர் எம்.யூசுப், டெங்கு தொடர்பில் விரிவான விளக்கங்களை வழங்கியிருந்ததுடன் வைத்தியர்களின் கேள்விகளுக்கும் பதில்களை வழங்கி வைத்தார்.

தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம்.எஸ்.இர்சாத், சுற்றுச்சூழல் மற்றும் தொழில் சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத், பொதுச் சுகாதாரப் பிரிவுப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.எம்.ஹில்மி ஆகியோர் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், நிகழ்வை ஒருங்கிணைப்புச் செய்த பிராந்திய தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சீ.எம்.பசால் டெங்கு தொடர்பிலான புள்ளி விபரங்களையும் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதிலுள்ள சவால்கள் மற்றும் தடைகள் பற்றியும் விரிவாக விளக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடல்சார் சூழல் பாதுகாப்பு கலந்துரையாடல்



சாய்ந்தமருது செய்தியாளர்

கல்முனையின் கடல்சார் சூழல் பாதுகாப்பு தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் கல்முனை மாநகர சபை கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (25) நடைபெற்றது.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் ஒருங்கிணைப்பில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் கடல் மற்றும் கடற்கரைப் பகுதிகள் மாசுபடுத்தப்படுவதைக் கட்டுப் படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

கடற்கரையோரப் பகுதிகளில் அன்றாடம் சேர்கின்ற திண்மக் கழிவுகள் மாநகர சபையினால் தினசரி கிரமமாக அகற்றப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டிய மாநகர ஆணையாளர், பொதுமக்கள் கடற்கரைப் பகுதிகளில் குப்பை கொட்டுவதைத் தவிர்த்து நடக்கும் வகையில், அவர்கள் விரும்பக் கூடிய எழில்மிகு இடங்களாக அவற்றை மாற்றியமைப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை முன்வரவேண்டுமென வலியுறுத்தினார்.

இதற்கேற்ப பொருத்தமான திட்டமொன்றை வரைந்து, அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தலைமையகத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாக அம்பாறை மாவட்ட உதவி கடல்சார் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஏ.ஆர்.எச்.மொஹிதீன் உறுதியளித்தார்.

இக்கலந்துரையாடலில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், மாநகர பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் இஸட்.ஏ.எம்.அஸ்மீர், மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், சுகாதாரப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம்.இஸ்ஹாக், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், சுற்றாடல் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள், மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை, கரையோரம் பேணல் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகாரசபை, கடற்றொழில் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

## கந்தளாய் சாலியபுர மகா வித்தியாலய

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்கக்கோரி ஆர்ப்பாட்டம்



கந்தளாய் செய்தியாளர்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் வலயக்கல்வி அலுவலகத்துக்குட்பட்ட கந்தளாய் சாலியபுர மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்குமாறு கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று புதன்கிழமை(26) இடம்பெற்றது.

கந்தளாய் வலயக்கல்வி அலுவலகத்துக்கு முன்னால் இடம்பெற்ற குறித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை பெற்றோர்களும் பாடசாலை மாணவர்களும் முன்னெடுத்திருந்தனர்.

இதில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களும் பெற்றோர்களும் கலந்துகொண்டனர். இதன்போது, ''ஆசிரியர்களை நியமித்து தா, புவியியல், கணிதம் மற்றும் விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர்களை பெற்றுத்தா'' போன்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகளை ஏந்தியிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.



பிளாஸ்ரிக் முகாமைத்துவம் மற்றும் சூழல் பாதுகாப்புக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் புதன்கிழமை(26) இடம்பெற்றது. 'Plastic Free Trinco' எனும் தொனிப்பொருளில் ரின்கோ எய்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் லயோலா சுற்றுச்சூழல் மற்றும் நீதி மையத்தின் பணிப்பாளர் வணக்கத்துக்குரிய டொக்டர் தெர்ரி ஜே ரொபாமினால் நடத்தப்பட்ட கருத்தரங்கில் பிளாஸ்ரிக்கால் ஏற்படும் ஆபத்து தொடர்பாகவும் அதனை எவ்வாறு கையாள்வது குறித்தும் விளக்கப்பட்டது. படம்: கிண்ணியா செய்தியாளர்

# கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயம் 1C ஆக தரமுயர்வு



## ஹரீஸ் எம்.பி. அதிகாரிகளுக்கு நன்றி தெரிவிப்பு

மாளிகைக்காடு செய்தியாளர்

கல்முனை நகர் மக்களின் நீண்டகாலத் தேவையாக இருந்து வந்த கல்முனை கல்வி வலய கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலய தரமுயர்வு என்னுடைய வேண்டுகோளின் பிரகாரம் கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் 1C பாடசாலையாக (தரம் ஒன்று முதல் 13 வரை) தரமுயர்த்தப்பட்டது மகிழ்ச்சியளிக்கிறது என ஸ்ரீல.மு.காங்கிரஸ் பிரதித்தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, இந்தப் பாடசாலையை தரமுயர்த்த வேண்டிய அவசியம் தொடர்பிலும் இப்பாடசாலையின் தேவை தொடர்பிலும் ஆழமாகக் கேட்டறிந்து இந்தப் பாடசாலையை தரமுயர்த்த துரித நடவடிக்கை எடுக்க உதவிய ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க, கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோருக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், இப்பாடசாலையை தரமுயர்த்த நடவடிக்கை எடுத்த கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்னாயக்க, கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யூ.ஜீ.திசாநாயக்க தலைமையிலான அமைச்சின் அதிகாரிகள், மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம் தலைமையிலான அதிகாரிகள், கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.நஜீம் தலைமையிலான அதிகாரிகள், பாடசாலை அதிபர், முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பாடசாலை தரமுயர்த்தப்பட்ட நோக்கம், இலக்கு என்பன இறைவனின் உதவியுடன் சிறப்பாகவும் முழுமையாகவும் நிறைவேற இறைவனை பிரார்த்திக்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# எமது உரிமைகளை ஜனநாயக ரீதியில் வென்றெடுக்க வேண்டும்

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி.



கிரான் செய்தியாளர்

இலங்கை நாட்டில் சமத்துவமாக வாழ முடியாவிட்டால் தனி நாட்டில் வாழ வேண்டும் என எங்களது தலைவர்கள் எண்ணியிருந்தார்கள். ஆனால், நாங்கள் தற்போது இணைந்த வடகிழக்கில் பயணிக்க வேண்டும். எங்களது உரிமைகளை ஜனநாயக ரீதியில் ஒருமித்த குரலில் வென்றெடுக்க வேண்டும் என்பதை இன்றைய நாளில் இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடையவும் அவர்களது எண்ணங்கள் நிறைவேறவும் இன அழிப்பு இடம்பெற்று 40 ஆண்டுகளாகிய இன்று ஒருமித்த குரலிலே எம் உரிமைகளை வென்றெடுப்போம் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் தெரிவித்தார்.

1983 கறுப்பு ஜூலை படுகொலை தினம் தமிழீழ விடுதலை இயக்கத்தின் நிர்வாக செயலாளர் நித்தி மாஸ்டர் தலைமையில் திருமலையில் அமைந்துள்ள வெலிக்கடை தியாகிகள் நினைவிடத்தில் செவ்வாய்க்கிழமை(25) மாலை இடம்பெற்றது.

இதன்போது ஜூலை கலவரத்தில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களுக்கும் வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபகத் தலைவர்களின் படத்துக்கும் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மலர்தூவி அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இதன்போது கலந்து கொண்ட கருணாகரம் எம்.பி. கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், 1983 கறுப்பு ஜூலை மிகப் பெரிய இனக்கலவரம். தொடர்ந்து ஜூலை 25, 27ஆம் திகதியும் 53 தமிழ் அரசியல் கைதிகள் வெலிக்கடை வெஞ்சிறைக்குள் காடையர்களால் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டார்கள். எங்கள் தேசியத் தலைவர்களான தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களான தங்கத்துரை, தளபதி குட்டிமணி, முன்னாள் போராளி தேவன், நடேசு மாஸ்டர் உட்பட 53 பேர் வெலிக்கடை சிறைச்சாலையில் கொல்லப்பட்டார்கள். இச்சம்பவம் அன்றும் இன்றும் தமிழ் மக்கள் மத்தியில் மறக்க முடியாத வடுக்களாக இருக்கின்றன.

தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக கணிக்கப்பட்டதன் பிரகாரம் சுதந்திரமடைந்த காலத்திலிருந்து எமது தமிழ் தலைமைகள் அஹிம்சை வழியில் போராடினார்கள். உரிமைகள் பெறப்படாத காரணத்தினால் வலுக்கட்டாயமாக ஆயுதப்போராட்டத்துக்குள் தள்ளப்பட்டோம். அந்த ஆயுதப் போராட்டம் கூட 2009 மே 18ஆம் திகதி மௌனிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலமாக 13ஆவது திருத்தச் சட்டத்தினூடாக மாகாண சபை முறைமை வந்தது. 88ஆம் ஆண்டு இறுதியில் வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணமாக தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஆனாலும், 13ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் பகிரப்படாமல் இன்றுவரை இலங்கை அரசு மீறிக்கொண்டிருக்கின்றது.

இந்த வேளையில்தான் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டிய கட்டாயம் - அழுத்தம் சர்வதேசத்தினூடாக வந்து கொண்டிருக்கின்றது. இந்நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை இலங்கை ஜனாதிபதி சந்தித்துள்ளார். பிரதமர், இலங்கை தமிழ் மக்கள் சுயாட்சியுடன் கூடிய அதிகாரங்களை தற்போதைய அரசு முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என விரும்புகின்றேன். அதனை போராட்டத் தலைவர்கள் ஒற்றுமையாகப் போராடி வென்றெடுக்க வேண்டும்.

இந்நிகழ்வில், திருமலை மாவட்ட அமைப்பாளர் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருகோணமலை அரச அதிபராக சமிந்த ஹெட்டியாரச்சி நியமனம்



அப்துல் சலாம் யாசீம்

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர சேவையை சேர்ந்த சந்திம ஹெட்டியாரச்சி நியமிக்கப்பட்டு இன்று வியாழக்கிழமை (27) மாவட்ட செயலகத்தில் தமது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்கவுள்ளார்.

மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய பி.எச்.என்.ஜயவிக்ரம ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை திறந்த பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்ட இவர், 2000 - 2006ஆம் ஆண்டுவரை கோமரங்கடவெல பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் உதவிச் செயலாளர், சிரேஷ்ட உதவிச் செயலாளர், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார்.

# போக்குவரத்துக்கு இடையூறாக நடமாடும் கட்டாக்காலி மாடுகள்

## உரிய நடவடிக்கை மேற்கொள்ள கோரிக்கை



அம்பாறை மாவட்ட செய்தியாளர்

கல்முனை மாநகர சபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் போக்குவரத்துக்கு இடையூறாக கட்டாக்காலி மாடுகள் இரவு வேளைகளில் அதிகளவாக நடமாடி வருகின்றன. இக்கட்டாக்காலிகளின் தொல்லைகள் அதிகரித்திருப்பதால் அவற்றைப்பிடித்து உரிமையாளர்களிடமிருந்து தண்டப்பணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட நகர வீதி, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, சாய்ந்தமருது, மருதமுனை, பெரிய நீலாவணை உள்ளிட்ட வீதிகளில் சுற்றித்திரியும் கட்டாக்காலி மாடுகளால் அடிக்கடி விபத்துகள் மற்றும் பொதுமக்களின் நாளாந்த செயற்பாடுகளுக்கு சிரமமும் ஏற்படுகின்றது.

எனினும், இது தொடர்பாக பொதுமக்களினால் பல்வேறு முறைப்பாடுகள் சமூக ஊடகங்களில் விமர்சனங்களாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பதற்கு கல்முனை மாநகர சபை பொலிஸாருடன் இணைந்து எவ்வித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

மேலும், கடந்த காலங்களில் சம்மாந்துறை பிரதேச சபையினால் கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளருக்கு பல தடவைகள் அறிவுறுத்தியும் கவனத்தில் கொள்ளாமையினால் நகர் பிரதேசத்தில் போக்குவரத்துக்கு இடையூறாக திரியும் கட்டாக்காலி மாடுகள், 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் பிடிக்கப்பட்டு உரிமையாளர்கள் ஒரு மாட்டுக்கு தண்டப்பணம் மற்றும் பராமரிப்புச் செலவு பெறப்பட்டிருந்ததுடன் சில உரிமையாளர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மேலும் குறிப்பாக, கல்முனை-அக்கரைப்பற்று பிரதான வீதி, கல்முனை -மட்டக்களப்பு பிரதான வீதி, கல்முனையிலிருந்து சவளக்கடை செல்லும் முக்கிய பிரதான வீதிகளில் பகல், இரவு பாராது கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. கூட்டம் கூட்டமாக வீதிகளில் நடமாடுவதினாலும் வீதிகளில் கூட்டமாக கிடப்பதினாலும் தொடர்ச்சியாக விபத்துகள் இடம்பெற்று வருகின்றன.

எனினும், கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை உரிய முறையில் பராமரிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சமூக சேவை உத்தியோகத்தருக்கான பரீட்சை நடத்தப்படாமல் இழுத்தடிப்பு

## விண்ணப்பதாரிகள் கவலை

கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு மூலமாக சமூக சேவை உத்தியோகத்தர் தரம் மூன்றுக்கான திறந்த போட்டிப் பரீட்சை விண்ணப்பம் கோரப்பட்டு இரு வருடங்கள் கடந்துள்ள நிலையில், இன்னும் போட்டிப் பரீட்சை நடத்தப்படவில்லை என விண்ணப்பதாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும், விண்ணப்பிக்கும்போதே பரீட்சைக் கட்டணமும் அத்துடன் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் எவ்வித அறிவித்தல்களும் இன்னும் தமக்கு கிடைக்கப்படவில்லை என விண்ணப்பதாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு தகவல் அறியும் உரிமை சட்டம் மூலமாக விளக்கம் கோரப்பட்டுள்ள நிலையில், ''நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2020.02.25ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2022.04.26 ஆம் திகதிய 03/2022ஆம் இலக்க தேசிய வரவு - செலவுத்திட்ட சுற்று நிருபத்துக்கமைவாக நியமனங்கள் அனைத்தும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன'' என பதில் கிடைக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிலவி வருவதுடன் இதனை இழுத்தடிப்பும் செய்து வருகின்றனர். எனவே, குறித்த பதவி வெற்றிடம் தொடர்பில் துறைசார் அதிகாரிகள் கவனம் செலுத்தி இப்போட்டிப் பரீட்சையை விரைவில் நடத்துமாறு விண்ணப்பதாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## போடியார் புலம்பல்!



ஜனாதிபதி ரணில் மீது தாம் நம்பிக்கை வைத்துள்ளதாக மட்டக்களப்பு ஈபிஆர்எல்எவ் தோழர் துரைரெட்ணம் முந்தநாள் சொல்லியிருக்காரு எலுவா? அடே பொடியா நீ ஆரு ஜனாதிபதியானாலும் நம்பிக்க வச்சவன்தானே 2008, கிழக்கு மாகாணசப தேர்தல் முடிஞ்ச கையோட ஜனாதிபதி மகிந்தட ஹெலியில ஏறி கொழும்புக்கு போய் ரகசியமா பேசின கில்லாடி எண்டத உங்கட சுரேஷ் தோழர் ஒருக்கா சொன்னது ஞாபகம் இருக்கா ஒண்ட நம்பிக்கை எப்படிபட்டது எண்டது ஊருக்கும் ஒலகத்துக்கும் தெரியும்!

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# இரண்டாவது டெஸ்ட்: 397 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற பாகிஸ்தான்



சுற்றுலா பாகிஸ்தான் அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் திங்கட்கிழமை முதல் நடைபெற்று வருகிறது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதல் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி தங்களது முதல் இன்னிங்ஸூக்காக வெறும் 166 ஓட்டங்களை மாத்திரம் சேர்த்தது.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் பாக். அணி நேற்று போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 563 ஓட்டங்களை குவித்தது. ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய அஷாட் ஷபீக் இரட்டை சதம் அடித்து 201 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தார். மறுமுனையில் ஆகா சல்மான் சதம் கடந்து அசத்தினார். அதன் அடிப்படையில் பாகிஸ்தான் அணி 397 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறது.

இந்த போட்டியில் பாகிஸ்தான் அணியின் ஆதிக்கம் ஓங்கியிருக்கிறது. இன்னும் இரண்டு நாட்கள் எஞ்சியிருக்கும் நிலையில் இலங்கை அணி இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க போராட வேண்டிய நிலை காணப்படுகிறது. இன்று போட்டியின் நான்காவது நாள் ஆட்டம் தொடரவுள்ளது. முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெற்றியீட்டி தொடரில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மலிங்க போன்று பந்துவீசும் மகன் டுவின் மலிங்க





ரமணி

லசித் மலிங்க தற்போது அமெரிக்காவில் இடம்பெற்றுவரும் மேஜர் கிரிக்கெட் லீக் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு சொந்தமான நியூயோர்க் அணிக்காக பந்துவீச்சு பயிற்சியாளராக செயல்பட்டு வருகிறார்.

இந்த தொடருக்காக அமெரிக்கா சென்றுள்ள அவருடன் மலிங்காவின் மகனான டுவின் மலிங்காவும் சென்றுள்ளார். அங்கு நியூயோர்க் அணி வீரர்களுக்கு அவர் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கும் வேளையில் அவரது மகன் டுவின் மலிங்கா அவரைப் போன்று பந்து வீசும் பயிற்சி வீடியோ ஒன்றினை எம்.ஐ. நியூயோர்க் நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

அதில் பந்துவீசும் தன் மகனை பார்த்து ஆக்சன் எல்லாம் ஒழுங்காக வருகிறது. சரியான வேகத்துடன் நேராக பந்துவீச தொடங்கினால் இன்னும் திறனை மேம்படுத்தலாம் என்று கூறுகிறார் மலிங்க. அப்படி சொல்லிக் கொண்டிருக்கும்போதே டுவின் மலிங்கா வீசும் பந்து ஸ்டம்பை தட்டிச்செல்கிறது.

# நாங்கள் பதவிக்கு வந்த பின்னர் 35 பில்லியன் டொலர்களை சேமித்துள்ளோம்

## இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தலைவர்



இலங்கை கிரிக்கெட் வீரர்களின் மனங்கள் நோகும் வகையில் கருத்துகள் வெளியிடுவதைத் தவிர்க்குமாறு இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தலைவர் ஷம்மி சில்வா தெரிவித்தார். எம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானவை எனவும் அக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் மறுநாளே பதவி துறக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஆண்டு நடைபெற்ற ரி20 உலகக்கிண்ணப் போட்டியைக் கண்டுகளிக்கவென எண்ணற்றவர்களுக்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பணம் செலவிடப்பட்டதாக சிலர் போலிக் குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றனர். நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களுக்கு மாத்திரமே இந்த சலுகை வழங்கப்பட்டது. முந்தைய நிருவாகம் கிரிக்கெட் நிறுவனத்தை வங்குரோத்து நிலைக்கு தள்ளிவிட்ட நிலையில் நாங்கள் பதவிக்கு வந்த பின்னர் 35 பில்லியன் டொலர்களை சேமித்துள்ளோம்.

ஐ.சி.சி. வழங்கும் பங்கீட்டு நிதி, தொலைக்காட்சி உரிமைத்துவம், இன்னோரன்ன வர்த்தக விளம்பரங்கள், அனுசரணைகள் மற்றும் சந்தைப்படுத்தல்கள் மூலமே பெருந்தொகைப் பணத்தை நாங்கள் சேமித்துள்ளோம். இது அரசாங்கத்தினதோ பொதுமக்களினதோ பணம் அல்ல எனவும் தெரிவித்தார்.

# ஆசிய விளையாட்டு போட்டிகளை தவறவிடும் ஹர்மன்ப்ரீத்



இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவி ஹர்மன்ப்ரீத் கவுருக்கு இரு ஆட்டங்களில் ஆட ஐ.சி.சி. தடை விதித்துள்ளது.

பங்களாதேஷ் அணியுடன் அண்மையில் நடைபெற்ற ஒருநாள் போட்டியின் போது ஹர்மன்ப்ரீத் கவுர் 14 ரன்கள் எடுத்திருந்தபோது நஹிதா அக்தர் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அதனால் மிகவும் கோபமடைந்த இந்திய கேப்டன் ஹர்மன், ஸ்டம்புகளை பெட்டால் அடித்துவிட்டு வெளியேறினார். அதுமட்டுமல்லாமல் பெவிலியனை அடைந்தபோது ரசிகர்களிடமும் தன் கோபத்தை வெளிப்படுத்தினார்.

மேலும் போட்டிக்குப் பிறகு பேட்டியளித்த அவர், இந்தப் போட்டியின் மூலம் பல விடயங்கள் கற்றுக்கொண்டோம். கிரிக்கெட் தவிர்த்து பல விடயங்கள்! இங்கு நாங்கள் பார்த்திருக்கும் அம்பயரிங்கின் தரம் அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது. அடுத்த முறை நாங்கள் பங்களாதேஷூக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும்போது இப்படிப்பட்ட நடுவர்களுக்கும் சேர்த்து தயாராகவேண்டும் என்று கூறினார். இரு அணி கேப்டன்களும் ஒன்றாக கோப்பை வாங்கியபோது, ஏன் நடுவர்களையும் சேர்த்து அழைக்கக்கூடாது என்பதுபோல் பங்களாதேஷ் அணியைப் பார்த்துக் கூறினார்.

இந்நிலையில் இந்த விடயத்தை விசாரித்த ஐ.சி.சி. ஹர்மன்ப்ரீத் கவுருக்கு 2 போட்டிகளில் விளையாட தடை விதித்துள்ளது. பொதுவெளியில் நடுவர்கள் பற்றி அவதூறாகப் பேசியதற்காக மேலும் 25 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது. இந்த தடையின் மூலம் செப்டெம்பர் மாதம் நடக்கவிருக்கும் ஆசிய விளையாட்டு போட்டியில் முதலிரு போட்டிகளில் அவரால் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அவருக்குப் பதில் உப தலைவரான ஸ்மிரிதி மந்தனா இந்திய அணியை வழிநடத்தவுள்ளார்.

## விளையாட்டுத் துளிகள்

24 வயதான பிரான்ஸ் வீரர் கிலியன் எம்பாப்பேவை சுமார் 332 மில்லியன் டொலருக்கு வாங்க சவூதி அரேபிய நாட்டை சேர்ந்த அல் ஹிலால் கிளப் அணி முன்வந்துள்ளது. பி.எஸ்.ஜி கிளப் உடனான ஒப்பந்தத்தை எம்பாப்பே அதை நீடிக்க மறுத்து விட்டதாக தகவல் வெளியானது. போர்த்துக்கல் உதை பந்து வீரர் ரொனால்டோ, சவூதி அரேபியாவின் அல் நஸர் அணிக்காக விளையாடி வருகிறார்.

★★★★★

டிசம்பர் மாத இறுதியில் 2024ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரின் மினி ஏலத்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அறிக்கைகளின்படி, குறிப்பிடத்தக்க புதுப்பிப்பாக வரும் ஒவ்வொரு உரிமையாளருக்கும் பர்ஸ் தொகை 100 கோடி ரூபாவாக உயர்த்தப் படுகிறது. முந்தைய சீசனில் நிர்ணயிக்கப்பட்ட 95 கோடியில் இருந்து ஏல பட்ஜெட் அதிகரிக்கப்பட்டுள்ளது.

★★★★★

இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் உத்தியோகபூர்வ தேர்தலை நடத்துவதற்கும் அதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க மூவர் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளார்.

★★★★★

நடப்பு பீபா மகளிர் உலகக்கிண்ண உதைபந்து தொடரில் கொலம்பிய அணிக்கெதிரான ஆட்டத்தில் தென்கொரியா அணிக்காக கேசி பேயர் 78ஆவது நிமிடத்தில் மாற்று வீராங்கனையாக இறங்கியது சாதனையாக அமைந்தது. அவரது வயது 16 ஆண்டு 26 நாட்களாகும். இதன் மூலம் அவர் இளம் வயதில் உலகக்கிண்ண போட்டியில் களமிறங்கிய வீராங்கனை என்ற சிறப்பைப் பெற்றார்.

# அட்டாளைச்சேனையில் மாபெரும் மின்னொளி மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

தீகவாபி, திகாமடுல்ல நிருபர்கள்

அட்டாளைச்சேனை அல்-நஜா விளையாட்டுக் கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியிலான மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி வெள்ளிக்கிழமை கோணாவத்தை கடற்கரை பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகிறது.

அணிக்கு எட்டுப் பேர் கொண்ட ஐந்து ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட விலகல் முறையிலான சுற்றுப்போட்டியாக இது இடம்பெறவுள்ளதுடன் 56 அணிகள் பங்கேற்கவுள்ளன. இறுதிப் போட்டி ஓகஸ்ட் 1ஆம் திகதி இடம்பெறும். சம்பியன் அணிக்கு 40 ஆயிரம் ரூபா பணப்பரிசிலுடன் வெற்றிக்கேடயமும் 2 ஆம் இடத்தை பெறும் அணிக்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசிலுடன் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் மூன்றாம், நான்காம் இடங்களை தக்கவைக்கும் அணிகளுக்கும் முறையே 10 ஆயிரம், 5 ஆயிரம் ரூபா பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எம்.சி.சி. கிண்ணம் ஹீரோ வசமானது




தோப்பூர் செய்தியாளர்

மூதூர் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) பழைய மாணவர் விளையாட்டுக் கழகத்தின் 72 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு எம்.சி.சி. அணியின் ஏற்பாட்டில் மூதூர் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டியில் ஹீரோ அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

இவ்விறுதிப் போட்டியில் ஹீரோ மற்றும் நொக்கியா அணிகள் மோதிக் கொண்டன. இறுதியில் பெனால்டி சூட் அவுட் முறையில் 5:4 என்ற வித்தியாசத்தில் ஹீரோ அணி வெற்றி பெற்று எம்.சி.சி. சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

இத்தொடரில் 18 அணிகள் பங்குபற்றியிருந்தன. 17 போட்டிகளைக் கொண்ட நொக் அவுட் முறையிலாக இத்தொடர் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இத்தொடரில் சிறந்த விளையாட்டை வெளிப்படுத்திய அணிக்கு ஃபெயார் ப்ளே விருது, தொடரின் சிறந்த வீரர், தொடரின் சிறந்த கோல் காப்பாளர், ஆட்டநாயகன் விருதுகளும் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு கல்லூரியின் அதிபர் ஐ.ஆ.தர்ஜூன் தலைமையில் நடைபெற்றதோடு பிரதம அதிதியாக தேசிய காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளர் டொக்டர் சியா கலந்து கொண்டார். எம்.சி.சி. அணியின் முகாமையாளர் ஏ.ஆ.ஆ.ஹஸீனின்ஒழுங்குபடுத்தலில் மூதூர் உதைபந்தாட்ட சம்மேளனம் மற்றும் மூதூர் மத்தியஸ்தர் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இப்போட்டி சிறப்பாக நடைபெற்றது.

**உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு செய்திகளை தமிழன் பத்திரிகையில் பிரசுரிக்க விரும்பினால், செய்தியை சுருக்கமாக எழுதி, உங்கள் பெயர், ஊர், தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு g l h mon sr l h nl எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.**

# மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளுக்கிடையில் கிரிக்கட் சுற்றுப் போட்டி






மட்டக்களப்பு, கல்லாவளை நிருபர்கள்

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளுக்கிடையிலான மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி மட்டக்களப்பில் அண்மையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா தலைமையில் சமுர்த்தி பணிப்பாளர் எஸ்.புவனேந்திரனின் ஏற்பாட்டில் சிவானந்தா மைதானத்தில் இறுதிப்போட்டிகள் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் மூலம் அவர்களின் பலப்பரீட்சையை வெளிக்காட்டி இறுதி சுற்றில் மண்முனை வடக்கு பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினருக்கும் ஏறாவூர் நகர் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினருக்கும் போட்டி இடம்பெற்றதில் ஏறாவூர் நகர் அணியினர் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டனர்.

இந்நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் ஆ.நாவேஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன், மாவட்ட புள்ளி விபரவியலாளர் ரி.ஜெய்தனன், மாவட்ட கணக்காளர் எம்.வினோத், சமுர்த்தி தலைமை முகாமையாளர் மனோகிதராஜ் என பலர் கலந்து கொண்டனர்.

இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமுர்த்தி திணைக்களத்தினால் முன்னொடுக்கப்பட்டிருந்த குறித்த போட்டி நிகழ்வில் இளைஞர்கள் அதிக ஆர்வத்துடன் பங்குபற்றி தமது திறமைகளை வெளிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7